விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 29 | ஞாயிற்றுக்கிழமை (13.03.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 84

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P 021 2227310, 021 2227555, 021 2227560, FAX 021 2227310
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
E-mail: thirumurugan@eudoramail.com

# அரசு-புலிகள் பொதுக்கட்டமைப்புக்கு நோர்வே இறுதி வடிவம் கொடுக்கும்



## தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் எரிக் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கான அரசு - புலிகள் இணைந்த பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் முடிவுகளை அறிவிப்பதற்கு முன்னர் அதற்கான இறுதி வடிவத்தை நோர்வே வெளியிடும் என அந்நாட்டின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நோர்வே வெளியுறவு அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகஜர் கையளிக்க நாளை பேரணி

இராணுவத்தினரின் அத்துமீறல்களுக்கு எதிராகவும் பெண்கள் மீதான வல்லுறவு முயற்சிக்களுக்கு எதிராகவும் மக்களை அணிதிரளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்களின் வாழ்விடங்களிலும் மற்றும் போக்குவரத்துக்கும் தடையாகவுள்ள இராணுவக் க்ாவலரணகளை அகற்றக்கோரி நாளை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவிருக்கிறது.

இதன் பொருட்டு நாளை காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் பொதுமக்கள் அனைவரையும் கூடுமாறும் அங்கிருந்து பேரணியாகச் சென்று மகஜர் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கிராமத்துக்குள் புகுந்த கடல்நீர் கிக்கடுவவில் நேற்று பரபரப்பு

(கொழும்பு)

களுத்துறை கிக்கடுவ பகுதியில் நேற்று கடல்நீர் கிராமத்துக்குள் புகுந்ததால் அங்கு பெரும் பரபரப்பும் - திகிலும் - அச்சமும் ஏற்பட்டன.

ஓரளவு பெரும் அலைகள் பேரிரைச்சலுடன் கிராமத்துக்குள் புகுந்தது. கடற்கரையிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரம் வரை கடல்நீர் பெருக்கெடுத்து ஓடியது.

கடற்கரை ஓரங்களில் நின்றவர்கள் 'மீண்டும் சுனாமி' பீதியில் ஓட்டம் பிடித்தனர். ஆனால் கடல் அலைகள் 50 மீற்றர் தூரத்துடன் நின்றுவிட்டன.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னரும் இவ்வாறு பாரிய அலைகள் கிக்கடுவ கிராமத்துள் புகுந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்களிடையே ஒருவிதமான பதற்ற நிலை காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

# ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்ரோஷம் காவலரண்கள் மீண்டும் துடைத்தழிப்பு

## சாவகச்சேரியில் தொடர்கிறது வீதி மறியல் படலம்

(சாவகச்சேரி நிருபர்கள்)

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தின் எதிரொலியாக நேற்றும் சாவகச்சேரிப் பகுதியில் பெரும் களேபரமும் வன்முறையும் வெடித்தன.

இதன்போது இராணுவக் காவலரண்கள் தகர்க்கப்பட்டு துடைத்தழிக்கப்பட்டன. வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இதனால் போக்குவரத்துக்கள் முற்றாக தடைப்பட்டன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளையடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பொதுமக்கள் தமது மோட்டார் சைக்கிள்கள் மூன்றையும், துவிச்சக்கரவண்டிகள் பதினான்கையும் கைவிட்டு ஓடிச்சென்றனர்.

மேற்படி சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் அடித்து சேதமாக்கப்பட்டதுடன் அவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள் தமது சைக்கிள்களை ஒப்படைக்கவும் நஷ்ட ஈடு தருமாறு கோரியும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சாவகச்சேரி வைத்திய சாலைக்கு முன்பாக சென்றுகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து கல்வீச்சுக்கு இலக்கானது. தொடர்ந்து வீதி மறியலும் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் துவம்சம் செய்யப்பட்ட காவலரண்கள் புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், புதுப்பிக்கப்பட்ட இராணுவக் காவலரண்கள் இரண்டும் நேற்று மீண்டும் தகர்க்கப்பட்டு தீயிடப்பட்டது.

இதனையடுத்து அங்கு இராணுவத்தினரும், (12 ஆம் பக்கம் பார்க்க)



SWISS Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# அரச புலனாய்வுப் பிரிவு விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுத குழுக்களை உருவாக்கி வருகின்றது

## தமிழ்செல்வன் நோர்வே அரச பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் நேற்றுமுன்தினம் நோர்வே வெளிநாட்டமைச்சகத்தில் மூன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொணடனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பு நடைபெற்றது. இது நல்லெண்ண அடிப்படையிலான வரவேற்புச் சந்திப்பாக அமைந்தது.

இதனைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம் மதியம 1 மணிக்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன பீற்றர்சனுடனும், பின்னர 2.30 மணிக்கு நோர்வே சர்வதேச அபிவிருத்தித்துறையின் துணை அமைச்சருடனான சந்திப்புக்கள் நடைபெற்றன. நோர்வே வெளிநாட்டமைச சுடனான சந்திப்பிற்குப் பின்னர் மாலை 3 மணியளவில் ஒஸ்லோ கொந்தினென்தால் தங்ககத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஊடகவியாலாளர்களின் கேள்விகளுக்கு சுபதமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

இச்சந்திப்புக்களில் முக்கியமாக தமிழர் தாயகத்தில் நிலவுகினற நெருக்கடி நிலை மற்றும ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களுக்கான மனிதாபிமானத் தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்புக்களின் பினனர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலை மீள்கட்டமைபபுக்களுக்காக சர்வதேச சமூகம வழங்கி வருகின்ற உதவிகள் நேரடியாக தமிழர் தாயகப் பிரதேச மக்களுக்கு கிடைக்காத வகையில் இலங்கை அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இதனால் பேரழிவுகளைச் சந்தித்த தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்கள் தோன்றியுள்ளது என்றார்.

அத்துடன்,சர்வதேச உதவிகள வடக்கு-கிழக்கு மக்களை நேரடியாகச் செனறடையக்கூடிய பொதுக்கட்டமைப்பின் தேவை பற்றியும் விரிவாகப் பேசப்பட்டது. இப் பொதுக் கட்டமைப்பு தொடர்பாக நோர்வே தரப்பினால் முன் வைக்கப்பட்ட ஆலோசனை தமிழீழ விடுதலைப புலிகளால் சாதகமாக பரிசீலிக்கப் படடதாகவும் இவ் ஆலோசனை இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும பட்சத்திலேயே பொதுக் கட்டமைப்பு சாத்தியம் என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தென்தமிழீழத்தில இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் வழிநடத்தலில், மேற்கொள்ளப்பட்டு வருகின்ற யுத்தநிறுத்த மீறல்கள், போராளிகள் மீதான படுகொலைகள் மற்றும் பொது மக்கள் மீதான படைத்தரப் பின் தாக்குதல்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தினையும் சமாதானத்திறகான சூழலையும் மோசமாகப் பாதித்து வருகின்றது.எனவே இவற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர்,

சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே அரச பிரதிநிதிகளுக்கு எடுத்து





போர்நிறுத்த ஒப்பந்தத்தின் படி தமிழர் தாயகப்பகுதிகளில ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரச படைப் புலனாய்வுப பிரிவு இவ்வாறான புதிய ஆயுதக் குழுக்களை உருவாக்கி ஊக்குவித்து வருகின்றது. இது சமாதானத்தினை மேலும் மோசமான விளைவுகளுக்குள் இட்டுச்செல்கின்றது என்றும் உரைத்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் தழமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் மற்றும் மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கீதா ஆகியோர் இச்சந்திப்புக்களில் கலந்துகொண்டனர்.(க)

## இராசி பலன்

**13.03.2005**
**மாசி 29, ஞாயிற்றுக்கிழமை**
**அச்சுவினி பி.இ 03.45 மணிவரை**
**சித்தம் பி.இ 12.24 மணிவரை**
**இராகுகாலம் 4.54 - 6.21 மணிவரை**
**சுபநேரம் 9.21 - 10.51 மணிவரை**
**சதுர்த்தி விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், ஜனவசியம், தனவரவு, போசன் சுகம். |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு, கோபப்படுதல், சுபசெலவு, காரிய தாமதம். |
| மிதுனம் | முயற்சி கைகூடும், நல்ல வரவேற்பு, புதிய முயற்சி, தெய்வ சிந்தை. |
| கடகம் | செய்தொழில் விருத்தி, புதிய தகவல், காரிய அனுகூலம், நண்பர்கள் உதவி. |
| சிங்கம் | உறவினர் சந்திப்பு, புதிய திட்டமிடல், இடமாற்றம், சிந்தனை மிகுதி. |
| கன்னி | காரிய தடங்கல், உடல் வியாதி, நண்பர்கள் விரோதம், வாகன பயம். |
| துலாம் | குடும்ப சுகம், நல்லவரவேற்பு, தொழில் விருத்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| விருச்சிகம் | உடல் நலம், புதிய திருப்பம், காரிய சித்தி, உற்சாகம். |
| தனுசு | அமைதிக்குறைவு, காரிய தாமதம், தொழிலில் ஆர்வம், குடும்பக் கவலை. |
| மகரம் | பெரியோரினால் வெறுக்கப்படுதல், உடல் நலக்குறைவு, காரிய தாமதம், மாதாசுகம். |
| கும்பம் | கூட்டு முயற்சி, தேகாரோக்கியம், பொருள் சேர்க்கை, சுபசெலவு. |
| மீனம் | காரிய தாமதம், எதிர்பாராத நன்மை, தனவிரயம், கடினவார்த்தை. |

**பழைய நேரப்பழிகணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

## நிறுவனங்களின் உதவி வழங்கலில் வடமராட்சி கிழக்கு புறக்கணிப்பு

### கடற்றொழிலாளர்கள் விசனம்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சிக் கிழக்குப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை எந்தவொரு நிறுவனமும் எந்த உதவிகளையும் வழங்கவில்லை என இப் பகுதி மீனவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இப் பகுதி மீனவர்களுக்கு உதவப்போவதாக பல நிறுவனங்கள் வார்க்குறுதி அளித்த போதிலும் எந்த நிறுவனமும் தமக்கு இதுவரை உதவவில்லை என இவர்கள் விசனமடைந்துள்ளனர்.

சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கு உதவும் நிறுவனங்கள் ஏன் வடமராட்சி கிழக்கை புறக்கணிக்கின்றன என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது.

(ற-43)

## நீர்வேலி சம்பவத்துக்கு கூட்டுறவு சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)


நீர்வேலிப் பகுதியில் வயோதிபப் பெண் மீது இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட வல்லுறவு முயற்சி சம்பவமானது அருவருக்கத் தக்க செயலாக இருப்பதுடன் பெண்களின் சுதந்திரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால் இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்மைக்காலமாக இராணுவத்தின் அடாவடித்தனங்கள் பொதுமக்கள் மீது அதிகரித்துக் காணப்படுவதானது, அவர்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் பாதிப்புக்களையும் அச்சுறுத்தல்களையும், ஏற்படுத்துவதாக உள்ளது.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் முகாம் அமைத்திருக்கும் இராணுவத்தினரின் தகாத செயல்கள் குறிப்பாக் வயது வேறுபாடற்ற வல்லுறவுச் சம்பவங்கள் பெண்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரை அப்பகுதிகளை விட்டு வெளியேற்றுமாறு கோருவதுடன் இத்தகைய வல்லுறவுச் சம்பவங்கள் மேலும் தொடராது இருக்க உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இராணுவ அதிகாரிகளையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)



இணுவில் சிவகாமி அம்மன் கோவில் முன்றலில் அமைந்துள்ள 'சிதம்பரநாதன் ஞாபகார்த்த இல்லத்தினை' திரு பெ.கனகசபாபதி நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்து வைப்பதைப் படத்தில் காண்க.

## பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக் கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வழிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை

**உறுப்புரை 11.(1)**

**ஊ. இனப்பெருக்கத் தொழிற்பாட்டைப் பாதுகாத்தல் உட்பட உடலைப் பாதுகாப்பிற்கும் வேலை நிலைமைகளில் இடர்காப்பிற்குமான உரிமை.**

**மிகுதி நாளை.**

# வடக்கு – கிழக்கு பிரச்சினைக்கான தீர்வை பேச்சுவார்த்தை மூலமே காண முடியும்

## மீண்டும் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வை யுத்தத்தின் மூலம் பெற்றுவிட முடியாது: பேச்சுவார்த்தைகள் மூலமே இதற்கான தீர்வொன்றைக் காணமுடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

மகரகம இளைஞர் சேவைக் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர்கள் தமது உரிமைக்காகப் போராடி வரும் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் மட்டுமே தீர்வொன்றினைக் காண முடியுமென எனக்கு முன்பிருந்த ஆட்சியாளர்களால் எனக்குப பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

நானும் அதுதான் சரியென நினைத்து தமிழர்களைக் குறிப்பாக தமிழர்களின் உரிமைக்காகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது போரினைத் திணித்தேன்.

ஆனால், அதன்மூலம் தீர்வொன்றினைக் காணமுடியாது என்றும், உயிரிழப்புக்களுக்கே விலை கொடுக்கப்படுகின்றன எனவும் எண்ணி சமாதானத்தின்பால் எனது பார்வையையும், எண்ணத்தையும் திணித்தேன். அதன்படி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தற்போது விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்.

தற்போது சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்காவிட்டாலும் பேசசுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ்மக்களின் ஒரே சிந்தனையும், எண்ணமாகவுமுள்ள சமாதானத்தையும், சுதந்திரத்தையும் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும அதுவே எனது குறிக்கோளாகும்.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளைக் கையாள்வது தொடர்பான பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவது குறித்து விடுதலைப்புலிகளோடு ஒரு இணக்கத்துக்கு அரசு முதலில் வரவேண்டும். பின்னர் அதன் அடிப்படைகளில் ஏற்படும் நல்லெண்ணத்தையும், தொடாச்சியான முன்னேற்றத்தையும் வைத்துக்கொண்டு சமாதான முயற்சியினை முன்னெடுக்கமுடியும்.

மக்களைப் பெரிதும் பாதித்த சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டமைப்புப் பணிகளுக்கான பொதுக் கட்டைமைப்பொன்றை முதலில் ஏற்படுத்தவும் அதனூடாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் கோரி இந்த மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியதையடுத்து நான் மகிழ்ச்சியடைகின்றேன. அதனை வெகுவாக வரவேற்கின்றேன்.

இலங்கையின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் மக்கள் சமூகம் இன, மத பேதங்களுக்கு அப்பால் சென்று ஒன்றாக இணைந்ததை எம்மால் காணமுடிகிறது.

தெற்குப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது போன்று தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திலும் நாம் எமது பணிகளை முன்னெடுக்க வேண்டும். அந்தப் பணிகளில் விடுதலைப்புலிகளையும் ஒன்று சேர்த்துக்கொண்டு பொதுக் கட்டமைப்பொன்றினை அரசு உடனடியாக ஏற்படுத்தவுள்ளது. இதனை எவரும் வேறு சிந்தனைகளோடோ அல்லது மாற்றுக் கண்களோடோ பார்க்கக்கூடாது.

அரசின் இந்தச் சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் ஆட்சேபித்தவர்கள் இதனை மனிதாபிமானப் பணியாக நோக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், எந்தவொரு முட்டுக்கட்டைகள் போடப்பட்டாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைச் கவிழ்த்து விடமுடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, கூட்டமைப்பைச் சேர்ந்த சகல பங்காளிக்கட்சிகளும் ஐக்கியமாகச் செயற்படவேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

ஒரே தடவையில் 41 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது. க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்திபடைந்தவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற-47)

# இறுதித் தீர்வொன்றை இலக்காக வைத்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## இதுவே எமது நிலைப்பாடு என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் சமாதானப் பேச்சுவார்த்தையையே தமது கட்சி எதிர்பாப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல வீரவன்ச மீண்டும் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் ஆற்றிய உரைக்குப் பதிலளித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இறுதித் தீர்வொன்றை இலக்காக வைத்து பேச்சுக்கள் ஆரம்பிக்கவேண்டும். அதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும். அதனை மீறி சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமாயின் அதனை எதிர்ப்பது மடடுமன்றி குழப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாடுபூராகவும் மேற்கொள்வதோடு சத்தியாக்கிரக போராட்டத்திலும் குதிப்போம்.

நாங்கள் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதையே விரும்புகின்றோம். அதனை ஆரம்பிக்குமாறு நாங்கள் ஜனாதிபதிக்கு பல்வேறு வகையிலும் அழுத்தம் கொடுத்து வருகின்றோம். ஆனால் ஜே.வி.பியே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவிடாமல் குழப்பி வருவதாக பலரும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் அதனை எமக்கு எதிரான அரசியல் கட்சிகள் அனைத்தும் போதித்து வருகின்றன.

இதற்கு எம்மால் என்ன செய்ய முடியும்? பழி விழுந்தால விழுநததுதான். ஆனால் எம்மீது குற்றம் இருக்கின்றது என்பதை ஜனாதிபதியோ, அரசாங்கமோ தெரிவிக்கமாட்டாாகள். நாங்கள இதனை அடித்துக்கூறுவோம். ஏனென்றால் எங்கள் மீது எவ்விதமான பிழையும் இல்லை என அவர்களுக்குத் தெரியும்.

ஆனால், நாங்கள் அழுத்தம் கொடுப்பதை வைத்துக் கொண்டு இறுதித்தீர்வை இலக்காக வைத்து ஜனாதிபதி சமதானப் பேச்சுவார்த்தையை மிக விரைவில் ஆரம்பிப்பார் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிட்டார். (ற-4)

# எமது தலைவர் மக்களுக்காகவே போராட்டத்தை ஆரம்பித்தார்

## ரமணன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

எமது தேசியத் தலைவர் இந்தப் போராட்டத்தை மக்களுக்காகவே தொடங்கினார். எமது மக்களுக்கு ஒரு பிரச்சினையென்றால் நாங்கள் என்றுமே எங்களது உயிரைக் கொடுக்கவும் தயங்கமாட்டோம்.

இவ்வாறு காக்காச்சிவட்டைப் பிரதேச மக்களுடனான கலந்துரையாடலின்போது மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளமதி ரமணன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

எமது பிரதேசம் மிகவும் வேகமாக முன்னேற்றப்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் விளையாட்டு, கல்வி, கலாசாரம் என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும். இவற்றுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பாரியளவு பங்களிப்புக்களைச் செய்யவுள்ளனர்.

இந்த பின்தங்கிப் பிரதேசமான காக்காச்சிவட்டை பாடசாலையின் கட்டட வசதிகளை அரசு கவனிக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை முப்பது இலட்சம் ரூபா நிதியினை ஒரு கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கியுள்ளது.

எமது இளைய சமூகத்தை கல்வியிலோ ஏனைய துறைகளிலோ முன்னேற்ற வேண்டிய கடமை எமக்குண்டு. மக்கள் துணிந்து தமது பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும.

எமது பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த பல செயறறிட்டங்களை விரைவில் அமுல்படுத்தவுள்ளோம. அவற்றுள் மாணவ, மாணவிகளுக்கான இரவுநேர கற்கை நிலையங்களை ஏற்படுத்தி இவற்றுக்கான ஆசிரியர்களை நியமிக்கவுள்ளோம்.

விடுதலைப்போராட்டத்தை தலைவர் எமது மக்களுக்காகவே தொடங்கினார். தற்போதும் வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டுசெல்கிறார்.

எமது பிள்ளைகளை நாம் முன்னேற்றுவதன மூலம்தான் எமது பிரதேசம் முன்னேற்றப்படும்.

இதேவேளை இப்பிரதேச மக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கின்ற போதும் அவற்றை ஒரு திட்டமிடல் இல்லாது செலவு செய்கின்றனர். இப்படியான வீண்செலவு செய்யும் தன்மை குறைக்கப்பட வேண்டும்.

சேமிப்புப்பழக்கத்தை அதிகம் உண்டாக்க வேண்டும. அது மட்டுமன்றி இப்பகுதியில் அனைத்து வளங்களும் செழிப்பு மிக்கதாக காணப்படுகின்றன.

இதனை வைத்துக்கொண்டு எமது பிரதேச விவசாயத்தினையும், நாம் முன்னோக்கிக்கொண்டு செல்லவேண்டும்.

இதனடிப்படையிலேயே பல சுய உணர்வுத் தேவைகளை நிறைவு செய்யலாம். இதன்மூலம் பெரிதளவு செலவுச் சிக்கனத்தை கடைப்பிடிக்கலாம் எனத் தெரிவித்தார். (க)

## மஹோற்சவம்

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளதுடன், மாலை 6.30 முதல் 7.30 வரை 'அம்பாளின் அருட்கடாட்சம்' என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்திய சசிதரனின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# துன்னாலை கலிகைச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலிருந்து....



மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.



இராணுவ முகாமுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள்....



இராணுவத்திற்கெதிராக வீதியில் ரயர்கள் எரிக்கப்படுகின்றது.



நெல்லியடி போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி வீ.என்.லால் மக்களை சமரசப்படுத்தும் முயற்சியில்..

படங்கள்:எஸ்.இராமச்சந்திரன்

# 'சுனாமி' தாக்கிய பிரதேச வாழ். மீனவர்களுக்கு

# படகுகளையும் கட்டுமரங்களையும் வழங்குவதால்

# பாதிக்கப்பட்டோரது இயல்புவாழ்வு திரும்பிவிடாது

## யாழ்.அரசசார்பற்ற இணையத்தலைவர் சீடா குழுவிடம் எடுத்துரைப்பு

(தென்மராட்சி)

**சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 'படகுகளையும், கட்டுமரங்களையும், வலைகளையும் வழங்குவதால் மட்டும் அவர்களுக்கு இயல்புவாழ்க்கையை ஏற்படுத்திவிட முடியாது. எனவே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுடன். கலந்துரையாடி அவர்களுக்கான உண்மைத் தேவைகளை அறிந்து அதன் பிரகாரம் செயற்படக்கூடிய வழிவகைகளை அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.**

இவ்வாறு நேற்றையதினம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருநத சடா நிறுவனத்தின் அதிகாரி ஜோ.வில்லியம் தலைமையிலான குழுவினிடம் யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பொறியியலாளா பொ.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த இக்குழுவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்தல அமைச்சு, உலக சுகாதார நிறுவனம, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர்.

இணையச் செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இணையச் செயலாளர் தேவானந்தா, எஸ். பரமநாதன், ஏ.கே.சிவசுப்பிரமணியம், வணபிதா ஏ.ஐ.பேர்னாட் அடிகள், திருமதிசறோஜா சிவச்சந்திரன் உட்பட வேறும் பலர் பங்குகொணடிருநதனர்.

இதன்போது இணையத் தலைவர் பொ.விக்கினேஸ்வரன் தொடர்ந்து குறிப்பிடும்போது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெரிய அளவிலான அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் திட்டமிட்ட முறையில் இடம்பெறவில்லை. யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிகப்பட்ட குடும்பங்களின் உண்மையான தேவைகள் சரியானமுறையில் இனங்காணப்படவுமில்லை. திட்டமிடப்படவுமில்லை. அரசசேவையில் இருககின்ற உயர்மட்ட மற்றும் கீழ்மட்ட அதிகாரிகளினால் பாதிக்கப்பட்ட மககளின் உணர்வுகளைச் சிவரச் புரிந்து கொள்ளமுடியாத நிலையே காணப்படுகிறது.

இந்தநிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான திட்டமிடல் பகுதி அறிமுகப்படுத்தப்படவேண்டும். இதன மூலம் மாவட்டத்தில் செயயப்படவேணடிய திட்டங்கள் பற்றி அனைத்துத் தரப்பினருடனும் கலநதுரையாடி, முடிவெடுத்துச் செய்யக்கூடிய ஏதுநிலையை உருவாக்கமுடியும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும மேலிருந்து கீழ்நோக்கிச் செய்யப்படும் அணுகுமுறையினால் எத்தகைய மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படப்போவதில்லை. எனவே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த முறையான திட்டங்கள் அமுல்செய்யப்படவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்துக்கும், மனித உரிமைகளுக்குமான நிறுவனத்தின் பணிப்பாளர் வணபிதா ஏ.இ.பேர்னாட் அடிகள் அங்கு கருத்துக் கூறும் போது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தல் யுததத்தினாலும் சுனாமியினாலும் பாதிப்படைந்த மக்களுக்கான திட்டங்களை வகுக்கும்போது சிவில் சமூகப் பிரதிநிதிகளின் கருத்துக்கள் கேட்டறியப்படுவதில்லை. அத்துடன் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் குழுக்களுடன் நாம் கடந்த காலங்களில் பல தடவைகள சந்தித்து எமது உணர்வுகள் பற்றியும், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் பற்றியும் எடுத்துரைத்து வந்துள்ளோம். ஆயினும் இதுவரையும் எதுவுமே அமுலாகவில்லை.

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற சிறைச்சாலையின் பௌதிகநிலை மிகவும் மோசமாகவுள்ளது. இங்கு சிறைபடுத்தப்பட்ட நிலையில் இருக்கும் மனிதர்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்குழுவினர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளையும் பார்வையிட்டதுடன் யாழ்மாவட்ட அரச அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்தனர் எனத் தெரியவருகின்றது.

(ப-16)

# சாராயம் விற்றவருக்கு சிறைத்தண்டனை

(புங்குடுதீவு)

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சிறிஸ்கந்தராசா என்பவருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் குறித்த நபரைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், 4 மாத சிறைத்தண்டனையும் விதித்தன.

இதேபோல் வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த இராசேந்திரன் கஜேந்திரன் என்பவருக்கும் எதிராக அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற குற்றச்சாட்டின் பெயரில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நதிபதி க.அரியநாயகம் தீர்ப்பளித்தார். (ப-101)

## சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி

# யாழ்.மத்திய கல்லூரி அணி 42 ஓட்டங்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருக்கிறது.

கடந்த 7, 8ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி தனது முதல் இனனிங்சில் 9 விக்கெற்றுக்களை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

றொகான் - 104, பிரவாத் - 41, செல்ரர் -31 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் ஜனார்த்தனன் 3 விக்கெற்றுக்களையும், ஹேமகுமார், கௌசிகன ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து, தனது முதலாவது இன்னிங்சை ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி, சகல விக்கெற்றுக் களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

சிறப்பாகப் பந்து வீசிய வியாசன் 6 விக்கெறறுக்களையும், பிரசாத் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

**follow on** ஆனதால் தொடர்நது தனது இரண்டாவது இன்னிங்சை ஆடிய இந்துக்கல்லூரி அணி 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதால தோல்வி அடைந்தது.

ஜனார்த்தனன் 61 ஓட்டங்களையும், உமாகரன் 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் விதுப்பிரியன் 5 விக்கெற்றுக்களையும், வியாசன் 4 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

(ந.7,19)




**வடமராட்சி லயன்ஸ்கழகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கியது. லயன்ஸ்கழகப் பொருளாளர் கே.தங்கராஜா குடும்பமொன்றிற்குப் பொருட்களை வழங்குவதையும், அருகில் லயன்ஸ் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.தணிகாசலம், லயன்ஸ் தலைவர் எம்.தர்மலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.**

*(படம்:பருத்தித்துறை நிருபர்)*

# சிக்கல்

(பருத்தித்துறை)

தொண்டமனாறு தொடக்கம் மணற்காடு வரையான பிரதேச பாடசாலைகளில் 10 பாடசாலைகள் இடமாற்றி அமைக்கப்படவுள்ளது.

இதறகான காணியைப் பெறுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தில் அரச காணிகள இல்லாததினால் இப்பாடசாலைகளைப் பாதுகாப்பான இடங்களில் அமைக்க முடியாதநிலையில் இப்பாடசாலைகள் நிர்மாணிக்கும் பணி தாமதமடையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ப-35)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் நிவாரணக் கல்விச் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அலைத்தாக்கங்களுக்கு உட்பட்ட வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் விரிவுரையாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை நிவாரண கல்வித் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தினர்.

கல்வியமைச்சின் பணிப்புரைக்கமைய சுனாமி நிவாரணக கல்விச் செயற்றிட்டம் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதுடன், மகிழ்ச்சிகரமான கற்றல் - கறபித்தல் செயன்முறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

முதற்கட்டமாக ஆழியவளை சி.சி.த.க பாடசாலை மற்றும் உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் இதற்கு மிகுந்த வரவேற்பளித்தனர். மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கற்றனர்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கற்றல் சாதனங்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கான செயற்பாட்டுடன் கூடிய, விளையாட்டுடன் கூடிய கற்றல் நடவடிக்கைகளை முகிழ்நிலை ஆசிரியர்கள் மேற்கொண்டனர்.

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கற்றல் ஒப்படைகள் வழங்கப்படடு வழிகாடடல்களும் மேற்கொளளப்பட்டன. கல்லூரியின் விரிவுரையாளர் மாணவர்களுக்கான வழி காட்டல் ஆலோசனை வழங்கல் சேவையை வழங்கி ஆற்றுப்படுத்தினர். (ந)

# வயோதிபர் படுகாயமடைந்தார்

வீட்டுக்கு எதிரே உள்ள பலசரக்குக் கடையில் பாண் வாங்கச் சென்ற வயோதிபர் ஒருவர் மோட்டார் சயிக்கிளினால் மோதப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை மாலை 7மணியளவில் அல் வாயில் நடைபெற்றது. இதில் அல்வாய் கிழக்கைச சேர்ந்த செல்லையா சிவப்பிரகாசம் (வயது64) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ப-35)

# வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கனடாவாழ் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் வட இலங்கை சர்வோதயத்தினால் வறிய குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட இலங்கை சர்வோதய வளாகத்தில வட இலங்கை சர்வோதய பொறுப்பதிகாரி செல்வி க.புஸ்பமணி அவர்கள் த்லைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பேரின்பநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகப் புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் வ.இசைச்செல்வன், கிராம அலுவலகர்களான சு.ப.வினாயகமூர்த்தி, கு.சந்திரா, புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம், வட இலங்கை சர்வோதய நிர்வாகசபை உறுப்பினர் இ.யோகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப.126)

# துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை பிற்பகல் 1மணிக்குப் பின்னரே வைத்திய சேவையினை வழங்குவதனால் புங்குடுதீவு பிரதேசத்தில் தியாகதீபம் தீலிபன் வைத்திய சேவையின் மூலம் புங்குடுதீவு மக்களுக்கு வைத்திய சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வைத்திய சேவையினைப் பெறமுடியாது தவிக்கும் இறுப்பிட்டி, மடத்துவெளி போன்ற இப்பகுதி மக்களுக்காகத் தமது வைத்திய சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடன் இப்பகுதியிகளுக்குத் திலபன் வைத்தியசாலைத் தொண்டர்கள் சென்று வருவதற்கு ஏதுவாகப் புங்குடுதீவு கனடாவாழ் ஒன்றியத்தின் நிதி உதவியுடன் வட இலங்கை சர்வோதயத்தினால் இரண்டு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படடுள்ளன. (ப-126)

# பொது நன்மைகளுக்காக வாழ்பவர் இறைவனுக்கு உகந்தோராய் இருப்பர்

ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன் யோசித்து திட்டமிட்டு அதற்கான முயற்சிகளின்



ஈடுபாட்டாலே அக்காரியமானது அரைப்பங்கு முடிவடைந்ததற்கு சமமாகும் என்று தத்துவவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அம் முயற்சியில ஈடுபடும் முன்னமே இதனைச் செய்ய முடியுமோ, இடை நடுவில் விடப்படுமோ என்று ஐயம் கொண்டால் அக்காரியம் பல வேளைகளில் தடைப்பட்டு விடுவதை அனுபவித்தினூடாகக் கண்டிருக்கினறோம்.

எதைச் செய்வதற்கும் ஒரு மன வலிமை வேண்டும். இயேசு அன்பு செய்த இலாசர் என்ற நண்பன் இறந்த செய்தி இயேசுவுக்கு அறிவிக்கப்படுகின்றது. இயேசுவும நான்கு நாள்களுக்குப் பின் இலாசரின் ஊராகிய பெத்தானியாவுக்கு வந்தார். இலாசரின் சகோதரிகளான மார்த்தாள், மரியாள் இருவரும் சகோதரனுக்கு நடந்த இறப்பை நினைத்து புலம்பி அழுதனர். இயேசு வந்து ''உன் சகோதரன் உயிர்த்து எழுவான்'' என்றார். மார்த்தாள் ''என் சகோதரன இறுதி நாளில் உயிர்பெறுவான் என எனக்குத் தெரியும'' என்றாள். அதற்கு இயேசு அவனிடம் 'உயிர்த் தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்'என்றார். (யோவான் 11:25)

## பரமபிதா காட்டிய பாதை

### நம்பிக்கையின் பலம்

யானையின் பலம் தும்பிக் கையிலே, மனிதனின் பலம் நம்பிக்கையிலே என்பார்கள். மனிதன் அடிக்கடி அவநம்பிக்கை நிலைக்குத் தள்ளப்படுபவனாக இருக்கின்றான். இயேசுவை ஆண்டவர், மெசியா, இறைமகன், இரட்சகர் என்று கூறிய மார்த்தாள், நான்கு நாளுக்குப பின்னர் இறந்தவனை உயிர்ப்பிககச் சென்ற வரை சகோதரி மார்த்தாள அவநம்பிக்கையுடன் கூறுகின்றாள் ''ஆண்டவரே நான்கு நாளாயிற்று. நாற்ற மடிக்குமே'' என்றாள். இயேசு "நீ நம்பினால் கடவுளின் மாட்டியைக் காண்பாய என்று உனக்கு நான் கூறவில்லையா என்று கூறி, இலாசரை வெளியே வா'' என்று உரைத்து இலாசரை உயிர்ப்பித்தார்.

இவ்வுலகப் போக்கின்படி வாழ்வோர் இறைவனுக்கு உகந்தவர்களாக இருக்கமுடியாது. அவர்கள் ஊன் இயல்பின் இச்சைகளையே நிறைவேற்றுவர். ஆவிக்குரிய மன நிலையில் வாழ்வோர் அமைதியும், மன நிறைவும் கொண்டவர்களாக இருப்பார்கள். நாம் பொருள் பண்டங்களைச் சேகரிப்பதிலே அதிக ஆர்வம் கொண்டவர்களாக ஆன்மீக வாழ்வில் அக்கறை அற்றவர்களாகச் செயற்பட்டால் இறுதியில் நாமும் நெருக்கடிகளுக்கு உட்பட்டு எம் வாழ்வை இழந்துவிடுவோம். நாம் இறைவன் வாழும் இல்லங்களாக, ஆலயங்களாக மாற முடியாது. எமது உள்ளங்கள் கள்வர் வாழும் குகைகளாகவே காட்சி தரும். வாழ்வுக்குச் செல்லும் வழியைக் கண்டு கொள்ள மாட்டோம்.

### உறுதியுடன் செயற்படல்

உருண்டோடும் உலகில் அள்ளிச் செல்லப்படும் அறப் பொருட்களைப் போல நாம் இருக்கக் கூடாது. கற்பாறை மீது கட்டப்பட்ட வீடுகளைப் போல் உறுதிப்பாடுடைய மன நிலை உள்ளவர்களாகச் செயற்படவேணடும் அநியாயங்களுக்கு துணை போகின்றவர்களாக இல்லாமல், அன்புப் பணிகளை முன்னெடுக்கின்றவர்களாக, ஆதாயத்தை நோக்கமாகக் கொள்ளாமல் சேவையில் நிறைவடைகின்றவர்களாகவும், புறணியும் பொய்யுரையும் கூறி சேவையை முன்னெடுப்பவர்களுக்கு சோதனைக்காரர்களாக அல்லாமல், ஊக்குவிப்பும் பாராட்டுக்களும் அளித்து தட்டிக் கொடுக்கின்றவர்களாக, கிறிஸ்தவ விழுமியங்கள் உடையவர்களாக வாழ்கின்றவர்களாக, தேவையுள்ள இடம தேடிச் சேவை செய்கின்றவர்களாகச் செயற்படவேண்டும்.

### உண்மை, நன்மை, நீதியைக் கடைப்பிடிப்போம்

கிறிஸ்து உங்களுக்குள் இருந்தால, நீங்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படு

**மரிய நிலக்ஷி செல்வமகள்**

வீர்கள். அதன் பயனாகத் தூய ஆவி உங்களுக்கு உயிராய் இருககும். (உரோ 8:10) எனவே தீமையை விலக்கி நன்மை செய்யக் கற்றுக் கொள்வோம். சட்டம் தருகின்ற தீமைகளில் இருந்து சகோதரத்துவம் என்னும மனிதாபிமானத்துககாக பரிந்துரைப்போம். கொள்கைகள் என்ற போர்வையில் சமுதாயத்துக்கு தீங்கிழைப்பவர்களாக அல்லாமல், பொது நன்மைக்காக அசௌகரியத்திலும் அமைதியைக் கடைப்பிடிப்போம் அல்லற் படுவோருக்காகவும் அநீதர்களுக்காகவும் மன்றாடுவோம். □

## கலந்துரையாடல்

(தென்மராட்சி)

சாவகசசேரி தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள கண்ணாடிப் பிட்டி பொது மயானத்தினைப் புனரமைப்பது தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் ஒன்றினை பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் இன்று சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் நடாத்துகின்றார்.

இக் கலந்துரையாடலில் பொது மக்களின் பிரதிநிதிகளையும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் பங்குகொள்ளும்படி பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அழைப்பு விடுத்துள்ளார். (ப-16)

## உதவு பொருட்கள் வழங்கல

(தென்மராட்சி)

சுனாமியினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி கோயில் குடியிருப்பு கிராமசேவையாளர் பிரிவில் தங்கியிருக்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த 26 குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவின் செயலகத்தில் எதிர்வரும் திங்கள் காலை 11 மணிக்கு உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் இது நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பங்காளித்துவ அபிவிருத்தி முகாமையாளர் பங்குகொள்கின்றார். (ப-16)

## பத்திரிகையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பட இறுதியாண்டு மாணவர்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் தொடர்பான விடயங்களைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கான செய்தியாளர் சந்திப்பு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது. (து)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி - நல்லூர் வீதி பாணன் குளம நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 27 ஆம் திகதி வரை 15 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் சாந்தி, அன்னதானம் என்பனவும் நடைபெறவுள்ளது. (து)

# நாளைய கண்டனப் பேரணிக்கு கூட்டுறவாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வயோதிப மாதுக்களை வணக்கத்திற்குரியவர்களாகப் போற்றும் தமிழர்களது பாரம்பரியத்தில் சிங்களச் சிப்பாய் ஒருவர் மிகக் கேவலமான முறையில் நடந்துள்ளமை தமிழ்ப் பெண்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

நீர்வேலிப்பகுதி வீடொன்றிற்குள் சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் புகுந்து அங்கிருந்த வயோதிபப் பெண்ணை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயற்சித்த செயலை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

வணக்கத்திற்குரிய தாயாகப் போற்றி மதிக்கப்படும் அறுபத்துமூன்று வயதுடைய பெண்ணை பலாத்கார பாலுறவிற்கு உட்படுத்த முயற்சித்ததானது சிங்கள இராணுவம் காமவெறி பிடித்து அலைவதையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவம் இருக்கும் வரை பாதுகாப்பு இல்லை என்பது இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது. வடக்கு-கிழக்கை விட்டு இராணுவம் வெளியேறினால் தான் தமிழர்கள் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழமுடியும் என்பதை இதன்மூலம் நாம் அறிய முடிகிறது.

எதிர்காலத்தில் சிங்கள இராணுவம் தமிழ்ப்பெண்கள் மீது இவ்வாறான செயல்களில் ஈடுபடுமானால் தமிழ்ப் பெண்களே இராணுவததைத் துரத்தி அடிப்பார்கள் என்பது திண்ணம்.

இந்த மிருகத்தனமான நடவடிக்கையைக் கண்டித்து நாளை திங்கட்கிழமை பொது அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கண்டனப்பேரணிக்கு கூட்டுறவாளர்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவிப்பதுடன், அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களும் தமது தலைமைக்காரியாலயததை மூடி அனைத்துப பணியாளர்களையும் பேரணியில் கலநது தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கஙகளின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடைத்தங்கல் முகாம்கள் அமைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் மாமுனைப பகுதியில் 121 இடைத்தங்கல் முகாம்களையும் செம்பியன் பற்றில் 115 இடைத்தங்கல முகாமகளையும சேவா லங்கா நிறுவனம அமைத்து வருகறது.

அத்துடன், இப் பகுதிக்கான பொது மண்டபத்தைப் போரூட் நிறுவனம் அமைக்க முன்வந்துள்ளது. மேலும் இப் பகுதியில் முன்பள்ளிகளையும் போரூட் நிறுவனம அமைத்துக் கொடுக்கவுள்ளது. இப பகுதியில் மருத்துவ வீடுகளையும் அமைக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது. இப் பகுதிக்கான நூலக வசதியை 'வேல்ட் விசன்'' நிறுவனம் பொறுப்பெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

# படையினரை பாடைகளில் அனுப்புவோம் என கூறும் அளவுக்கு சட்டம், ஒழுங்கு சீரழிந்துள்ளது

## அத்துரலியரத்ன தேரர் ஆவேசம்

(கொழும்பு)

வடககில் இருக்கும் படையினரை பாடைகளில் அனுப்புவோம எனறு தமிழ் எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு நாட்டின் சட்டதிட்டங்கள் சீர்குலைந்துள்ளதாக சிஹல உறுமய உறுப்பினர் அததுரலிய ரத்ன தேரர் சபையில் தெரிவித்தார்.

18ஆவது திருத்தச் சட்டமூலம மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் மூன்றிலொரு பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட அரசாங்கம் தவறிவிட்டது. இதனை நாம் அரசாங்கத்தின் பலவீனமாகவே காண்கிறோம்.

வடக்கு-கிழக்கில் சிறுவர்களை படையில் சேர்க்கிறார்கள். கடத்தல்கள், ஆட்கொலைகள், கப்பம் பெறல் எனபன எந்தவிதமான தடையும் இன்றி இடம்பெறுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தால் இயலவில்லை.

ஒரு சிலர் ஆயுதத்தைக் காட்டி பயமுறுத்தி தனி அதிகாரம் கோருகின்றனர். நாட்டில் பிரிவினைக் கோரும் இவ்வாறானவர்களுக்காக கட்சிகளும் ஸ்தாபிக்கப்படுகின்றன. இவற்றை எமது நாட்டு சட்டங்களால் தடுக்க முடியவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட பணத்துக்காக, பதவிக்காக கட்சி தாவுகிறார்கள். இவர்களுக்கு எதிராகவாவது அரசினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? எதுவும் செய்ய முடியாது அரசு மௌனம் சாதிப்பது ஏன்?

நாட்டில் வன்முறைகளும் ஆர்ப்பாட்டங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைதி குலைந்து விட்டது. ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டம் ஹர்த்தால் பேரணி என்ற போர்வையில் மக்களின் இயல்பு வாழ்க்கை சீரழிக்கப்படுகின்றது.

இதனையும் அரசாங்கம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் படையினரை பாடைகளில் அனுப்புவோம என மிரட்டி வருகின்றமையும், படையினர் மீது தாக்குதல் நடத்துவதையும் வேடிக்கை பார்த்துக் கொணடிருக்கின்றது. அமைதி நிறைந்த எமது நாட்டில் இன்று ஆர்ப்பாட்டங்கள் பெருகத் தொடங்கிவிட்டன.

ஒற்றுமையாக வாழ்ந்த எமது நாட்டு மக்கள் இன்று பிரிந்து செனறு நாட்டை துணடாடி பங்கு போடுகின்றார்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணம் நாட்டில் சட்டம், ஒழுங்கு சரியாகப் பேணப்படாமையே என்றார்.

அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நடைமுறைப் படுத்தாவிட்டால் நாடு பிளவுபட்டு வன்முறைகள் மலிந்துவிடும் நாடாக இலங்கை மாறிவிடும் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (க)

# உயர்ந்த வானம்



முத்து முத்தாயக் கொட்டி வைத்த நட்சத்திரம் பார்!
மோதி மோதிச் செல்லுகின்ற மேகங்களைப் பார்!
விட்டு விட்டு மின்னுகின்ற மின்னல்களைப் பார்!
எடடுத் திசையும் எட்டும் வண்ணம் இடிமுழக்கம் பார்!
தட்டுப் போல வானில் மின்னும் சந்திரனைப் பார்!
சந்திரனுக்கு ஒளி கொடுக்கும் சூரியனைப் பார்!
கொட்டுகின்ற மழைத்துளியின் சொட்டுகளைப் பார்!
சுற்றிவரும் காற்றினது சுறுசுறுப்பைப் பார்!
பட்டுப் போர்வை விரித்தது போல் பரந்த வானம் பார்!
எட்டி இருந்தும் உதவும் அதன் இனிய இயல்பைப் பார்!

*செ.மதுராந்தி, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.*





# தாய் சொல்லைத் தட்டாதே

“அம்மா இந்த விடுமுறைக்கு கண்டிப்பா நான் பாட்டி வீட்டுக்குப் போகணும்” என்று ஆட்டுக்குட்டி ராமு தன் தாயிடம் அடம்பிடித்தது.

“இல்லடா கண்ணு, அம்மாவுக்கு உடம்பு சரியில்ல. உன்னைத் தனியாவும் அனுப்பமுடியாது. வழியில புலி, சிங்கம் வந்தா உன்னைக் கடிச்சுத் தின்னுடும். அம்மா சொல்றத கேளுப்பா” எனக் கெஞ்சிய தாயாரின் பேச்சைக் கேட்க மறுத்து பிடிவாதமாயக் கிளம்பியது ராமு.

பாட்டுப் பாடிக்கொண்டே உற்சாகமாய் காட்டு வழியே சென்ற ராமுவின் எதிரே நரி ஒன்று வந்து நின்றது.

“ஏய்.... ஆட்டுக்குட்டி, நான் உன்னைக் கொன்று சாப்பிடப்போகிறேன்” என்று நெருங்க ஆட்டுக்குட்டிக்கு உதறல ஏற்பட்டது. என்றாலும் ஆட்டுக்குட்டி சமயோசிதமாக,



“நரியண்ணே, நான் என் பாட்டி வீட்டுக்குப் போறேன். அங்க நல்லா விருந்து சாப்பாடு சாப்பிட்டு குண்டாயிடுவேன். அதனாலே திரும்பி வரும்போது என்னைச் சாப்பிடுங்க” என்றது.

நரியும் தலையாடடிக்கொண்டே செல்ல, வழியில் எதிர்ப்பட்ட சிங்கம், புலி, சிறுததை அனைத்திடமும் இதே பதிலைச் சொல்லிச் சமாளித்துக்கொண்டே பாட்டி வீடு போய்ச் சேர்ந்தது ராமு.

பேரனின் வருகையால் உற்சாகமான பாட்டி வகை வகையர்க சமையல்செய்து பரிமாறத் தொடங்கினாள். நாட்கள் சில கழிந்தன. ராமு விடுமுறை முடிந்ததால் கிளம்பத் தயாரானது.

பாட்டியின் விருந்து உபசரிப்பால் திக்குமுக்காடிப் போன ராமுவிற்கு மறந்துபோன சிங்கம், புலி நினைவு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. விஷயத்தைப் பாட்டியிடம் சொல்லி அழுதது.

நீண்ட யோசனைக்குப் பின் பாட்டி ஒரு காரியம் செய்தாள். தன் வீட்டிலிருந்த பழைய மத்தளம் ஒன்றில் ராமுவை நுழைத்து முழுவதுமாக மூடி மததளத்தல் ராமு மூச்சுவிட சிறு ஓட்டையையும் போட்டு உருட்டிவிட்டாள். ராமு உருண்டுகொண்டே வர எதிரே சிங்கம் வந்தது.

“ஏ மத்தளமே பாட்டி வீட்டுக்குப் போன ஆட்டுக் குட்டியை நீ பார்த்தாயா?” என்று கேட்க, உள்ளிருந்த ராமு,

“ஆம் சிங்கராஜாவே, ஆட்டுக்குட்டி பாட்டி வீட்டில் அளவுக்கதிகமாக விருந்து சாப்பிட்டுவிட்டு வயிறு வெடித்து இறந்துவிட்டது” என்று சொல்ல, அதை நம்பிய சிங்கம அங்கிருந்து சென்றது.

இப்படியாக புலி, சிறுத்தை எல்லாவற்றையும் நம்ப வைத்த ராமு கடைசியாக நரியிடமும் இதே கதையைச் சொல்லியது.

“ஏய்... யாரது? மத்தளம் எப்படிப் பேசும். உள்ளே மறைந்திருப்பது ஆட்டுக்குட்டிதானே. விடுகிறேனா பார் உன்னை” என்றபடி துரத்த ராமு வேகமாக மத்தளததை உருட்டிக்கொண்டே ஓடிவந்து தப்பித்தோம் பிழைத்தோமென வீட்டுக்குள் நுழைந்தது.


அங்கே கவலையுடன் இருந்த அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லி, “இனிமேல் உங்கள் சொல்லைத் தட்டமாட்டேன் அம்மா”” என்று மன்னிப்புக்கேட்டது.

ராமுவின் தாய் மகனைக் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தது.

# இவை உங்களின் ஓவியங்கள்



அன்பழகி
வண்ணார்பண்ணை.



வ. நிலோஜன்
நாவாந்துறை.



ச. நிவேதன்
யா/நாவலர் மகாவித்தியாலயம்.

# இந்த நகரம் எந்த நகரம்

- பூங்கா நகரம் - பெங்களூர்
- பொற்கோவில் நகரம் - அமிர்தசரஸ்
- தீப நகரம் - மைசூர்
- இளஞ்சிவப்பு நகரம் - ஜெய்ப்பூர்
- தடுக்கப்பட்ட நகரம் - லாசா (திபெத்)
- உலகின் உயரமான நகரம - பாரி (திபெத்)
- புராதன நகரம் - டமாஸ்கஸ்
- வெள்ளை நகரம் - பெல்கிரேடு
- காற்று நகரம் - சிகாகோ
- ஏழு குன்று நகரம் - ரோம்
- உலகின் மிகப்பெரிய நகரம் - லண்டன்
- நிரந்தர நகரம் - ரோம்

# நிறந்தீட்டுவோம் வாருங்கள்

அன்புச் சிறுவர்களே!

விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசை தானே! இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.



# பயனுள்ள தகவல்கள்

- நீர் யானையின் வியர்வை சிவப்பாக இருக்கும்.
- ஒட்டகத்திற்கு 3 வயிறுகள் உள்ளன.
- பாம்பின் உமிழ்நீரே விஷமாகிறது.
- விமானததில் இருநது வானவில்லைப் பார்ததால் வட்ட வடிவமாக இருக்கும்.
- காண்டாமிருகம் சுத்த சைவம்.
- தண்ணீரில் வாழும் மீன்கள் தண்ணீர் குடிக்காது.

# டாஸ்மானியன் பேய்!



‘டாஸ்மானியன் பேய்’ என்றழைக்கப்படும் விலங்கு மிகப் பெரிய விலங்கு அல்ல. ஆனால் இந்த விலங்கின் உருவம் மிரட்டக்கூடிய தன்மையில் உள்ளது. இந்தவகை ஆண் விலங்கு ஒன்பது கிலோகிராம் எடை கொண்டவை. டாஸ்மானியாவில் காணப்படும் இந்த விலங்கு இரவில் உணவைத்தேடி அலையும். ஆனால் பகலில் இவ்விலங்கைப் பார்ப்பது அரிது.

தனித்தனியாக வாழும் தன்மையைக் கொண்டுள்ள இவ் விலங்கு மாமிச உணவு கிடைக்கும்போது மட்டும் பல விலங்குகள் சோந்து ஒன்றாக உண்ணும். இலையுதிர் காலத்தல் இவ்வகைப் பெண் விலங்கு, ஆண் விலங்குடன் இணைந்து மூன்று அல்லது நான்கு குட்டிகளை ஈன்று எடுக்கும். வளர்ச்சியடையாத குட்டி விலங்குகளை பெண் விலங்கு தன் வயிற்றில் காணப்படும் பையில் வைத்துப் பாதுகாக்கிறது. டாஸ்மானிய பேய் மற்ற விலங்குகள், பறவைகளின் சதைகள், எலும்புகள், முடிகள் போன்ற அனைத்தையும் உண்கிறது. மேலும் இவ்வகை விலங்குகள் மன், அனைதது ஊர்வன, ரசம் நிறைந்த பழஙகள, சிறு கிளைகள், இலைகள், மரங்களின் பட்டைகள் என அனைத்தையும் உண்கிறது.

# சாவகச்சேரியில் தொடர்கிறது களேபரம்...


























படங்கள்: விஜயன்

# மசூதியில் குண்டுவெடிப்பு

# 47 பேர் பலி, 80 பேர் காயம்



(ஈராக்)

ஈராக்கில் உள்ள மோசூல் நகர மசூதியல் நடந்த இறுதிச் சடங்கின் போது குண்டு வெடித்ததில் 47 பேர் பலியாயினர். 80 பேர் படுகாயமடைந் தனர்.

ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரம் மோசூல். இங்குள்ள சத்ரீன் மசூதியில், ஹிஷாம் அல் அராஜில் என்பவருக்கு நேற்று முன்தினம் இறுதிச் சடங்குகள் நடந்துகொணடிருந்தபோது, மசூதிக்குள் புகுந்த தற கொலைப்படைத் தீவிரவாதி தன் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்ததில் 47பேர் உடல் சிதறிப் பலியாயினர். இதில் 80பேர் படு காயமடைந்தனர்.

பலியானவர்கள் அனைவரும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் என்பதால், சன்னிப் பிரிவினருக்கு எதிராக இங்கு கலவரம் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மக்கள் அமைதி காக்கும் படி இங்குள்ள சன்னி பிரிவுத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(து)

## செசன்யாவில் ஹெலி விபத்து 15 ரஷிய வீரர்கள் பலி

(மாஸ்கோ)

செசன்யாவில் கடந்த வியாழக் கிழமை நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் 15 ரஷிய ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

எல்லைப் பாதகாப்புப் படைக்குச் சொந்தமான எம்.ஐ.8 ரக ஹெலிகொப்டரில் ரஷிய வீரர்கள் பயணம் செய்தனர்.

செசன்ய தலைநகர் குரோஸ்னி அரகே வயல்வெளியில் இறங்கும் போது உயர் அழுத்த மின் கம்பியில் உரசி ஹெலிகொப்டர் வெடித்தது.

இதில் சம்பவ இடத்திலலேயே 15 வீரர்கள் கொல்லப்பட்டனர். செசன்ய தீவிரவாதிகளின் தலைவர் அஸ்லன் மஸ்காடோவ் கடந்த செவ்வாய்கிழமை நடந்த சண்டையில் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்தது. இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக ஹெலிகொப்டா விபத்து நடந்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. (து)



உலகின் மிகப் பெரிய 400 கோடீஸ்வரர்கள் என ஃபோர்ப்ஸ் இதழ் அறிவித்துள்ள பட்டியலில் முன்னணியில் இருப்பவர்கள்: (மேல் வரிசை இடமிருந்து) பில்கேட்ஸ் (முதலிடம்), வாரன் பஃபெட் (2ஆம்இடம்), பால் ஆலென் (7ஆம் இடம்), (கீழ் வரிசை இடமிருந்து ) ராப்சன் வால்டன் (10ஆம் இடம்), கார்லோலஸ் சிலிம் ஹெலு (4ஆம் இடம்), லாரன்ஸ் எல்லிசன் (9ஆம் இடம்).



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் கோடைகால பேஷன் ஷோ நடந்தது. அதில் 2 அழகிகள் நவீன உடையணிந்து பூனை நடை நடந்து சென்றதைப் படத்தில் காணலாம். ஆடை வீற்பனை, துணி ஆலை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக பேஷன் ஷோ நடந்தது.

# குமரி மாவட்டத்தில் மீண்டும் சுனாமி

# 500 ஏக்கர் தென்னந்தோப்பு நீருள் மூழ்கின



குமரி மாவட்ட கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் கடற்கரையிலிருந்து அரை கி.மீற்றர் தூரம் கடல் ஊருக்குள் புகுந்ததால் மக்கள ஓட்டம் பிடித்தனர். கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அலையால் குமரி மாவட்டதத்தில் கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததுடன் பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து கடந்த 75 நாட்களாகத் தற்காலிக குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சுனாமி அலையால் மீனவர்களின் மீன்பிடித் தொழில் செய்யும் கருவிகளான படகுகள, வலை ஆகியவை முற்றிலும் சேதமடைந்து மீன்பிடித் தொழிலுக்கும் பல நாட்களாக செல்லாமல் இருந்து வந்தனர்.

தற்போது மீண்டும் தொழிற் கருவிகளைத் தயார்ப்படுத்தி ஓரளவு மீன்பிடித் தொழில் தொடங்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் குமரி மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு பல இடங்களில் ராட்சத அலைகள் எழும்பி ஊருக்குள் கடல்நீர் புகுந்தது.

நேற்றுமுன்தினம் காலையில் ராஜாக்க மங்கலம் அருகே உள்ள கணபதிபுரம் ஆயிரங்கால் பொழிமுகத்தில அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கதம்பைநார் ஆலையில் வேலை செய்துகொண்டிருந்த நேரத்தில் வழக்கத்தைவிடக் கூடுதலாக கடல் அலை அடித்துக்கொண்டிருந்ததை அவர்கள பார்த்தனர். கடல் அலை வேகமாக உள்ளதே என்று மனதில் நினைத்துக்கொண்டே வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சுமார் 9 மணி அளவில் கடல் அலையின் வேகம் அதிகரித்தது. சுமார் 25 அடி உயரத்திற்கு கடல் அலை எழும்பியது. இதைப் பார்த்ததும் கதம்பை நார் தொழிலாளர்கள் வேலையைப் போட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவந்து ஊருக்குள் தகவல் கொடுத்தனர். தொடர்ந்து ஒருமணி நேரத்திற்குள் கடல் அலையின் வேகம் அதிகரித்து கடல்நீர் ஊருக்குள் புகுந்தது. சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தென்னந் தோப்புகளில் 10 கிலோமீற்றர் தூரத திற்கு கடல்நீர் புகுந்தது.

தொடர்ந்து கடல் அலையின் வேகம் அதிகரித்து தண்ணீர் புகுந்ததால் கதம்பை நார் ஊறவைத்துள்ள குழிகளில் கடல்நீர் புகுந்து கதம்பைகளை இழுத்துச் சென்றது. இதனால் ரூபா12லட்சம் மதிப்புள்ள கதம்பைகளை கடல் இழுத்துச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. (து)


# பூனை சுட்டு உரிமையாளர் பலி

அமெரிக்காவில் வீட்டிலிருந்த துப்பாக்கியின் மீது வளர்ப்புப் பூனை பாய்ந்தபோது அது வெடித்ததில் குண்டு பாய்ந்து வீட்டுக்காரர் உயிரிழநதார்.

அமெரிக்காவின் மிக்சிகன் மாநிலம் பேட்ஸ் நகரைச் சேர்ந்தவரான ஜோசப் டேனடன் சம்பவத்தன்று வீட்டில் சமையல் அறையில் உணவு சமைத்துக் கொணடிருந்தார்.

அப்போது அவருக்குப் பின்னால அலுமாரியில் குண்டு பொருத்தப்பட்ட கைத்துப்பாக்கி இருந்தது.

அதன்மீது தற்செயலாக பூனை பாய்ந்து இடறியதில் திடீரென துப்பாக்கி வெடித்தது. அதில் இருந்த குண்டு டேன்டனில் உடல் கீழ்ப்பகுதியில் பாய்ந்து துளைத்தது. உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேல் சிகிச்சைக்காக மீண்டும் மற்றொரு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட போது அவர் உயிரிழந்தார். இது தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகிறார்கள். (து)



பிஜி நாட்டிற்குச் சென்றுள்ள பிரிட்டன் இளவரசர் சார்லசுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# இறந்த தந்தையின் உடலுடன் 10 ஆண்டுகள் வாழ்ந்த மகன்கள்

ஜப்பானில் இறந்துபோன தந்தை உடலுடன் 10 ஆண்டாக வாழ்ந்த மகன்கள் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானில் உள்ள இட்டாமி நகரில் வாழ்ந்தவர் யுஜிரோ கனோக்கா. இவர் இறந்த பின்பு இவரது உடலை ஒரு படுக்கையில் வைத்து உடன் வாழ்ந்துவருகின்றனர் இவரது 3 மகன்கள்.

இவர்கள் 3 பேரும் 70 வயதைத தாண்டியவர்கள். தங்களின் தந்தை இன்னும் உயிருடன் இருப்பதாக இவர்கள் நம்புகின்றனர்.

ஒருவேளை, அவர் இறந்திருக்க வாய்ப்பு உள்ளதா? என்ற கேள்வியை மூவரில் ஒருவர் சமீபத்தில தனது உறவினிடம கேட்டாராம்.

இந்த விஷயம் பொலிஸ"க்கு தெரியவந்தது. பொலிஸார் அவர்களின் வீட்டுக்குச் சென்று பிணத்தைக் கைப்பற்றினர்.

10 ஆண்டுக்கு முன்பே அவர் இறந்திருக்கக்கூடும் என்று பொலிஸா கருதுகின்றனர். இதுகுறித்து விசாரணைகள் நடந்துவருகின்றன. (ர)



சிறுவர்களிடம் தகாதமுறையில் நடந்துகொண்டதாக தொடரப்பட்ட வழக்கில் கலிபோர்னியா மாநிலம் சாண்டா மரியாவில் உள்ள கோர்ட்டிற்குத் தன்னுடைய தந்தையுடன் வந்தார் பிரபல பாப் பாடகர் மைக்கல் ஜாக்சன்.

# 1990இல் குவைத் மீது ஈராக் தாக்குதல்

# 1200 கோடி இழப்பீடு வழங்க ஐ.நா.ஒப்புதல்

(ஜெனிவா)

குவைத்தில் 1990ஆம் ஆண்டு ஈராக் தாக்குதல் நடத்தியபோது பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1200கோடி அளவுக்கு இழப்பீடு அளிப்பதற்கு ஐ.நா இழப்பீட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஈராக்கிடம் சிக்கி இறந்தவர்கள குடும்பங்களுக்கு, இழப்பீட்டில் பெரும் பகுதி போய்ச்சேரும். ஈராக்கின் பிடியில் சிக்கி இறந்த 602 பேர் மற றும் கண்ணிவெடியில் காயமடைந்த இருவர் குடும்பங்களுக்கு இழப்பீடு அளிப்பதற்காக ரூ.724 கோடி ஒதுக்கப்படுகிறது என்றார் இழப்பீட்டு ஆணையச் செய்தித் தொடர்பாளர் ஜோசில்ஸ். 602 பேரின் குடும்பத்தினர் இவ்வளவு ஆண்டுகளாக அடைந திருந்த மனவேதனைக்கும் சேர்த்துத்தான் இந்த இழப்பீடுகள் வழங்கப் படுவதாகவும் அவா கூறினார்.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் குவைத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியா, சவூதி அரேபியா, சிரியா, ஈரான், ஜோர்தான் ஆகிய நாடுகளைச சேர்ந்த 30 குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று பட்டியலில் அவர்களது பெயர்களையும் குவைத் அதிகாரிகள் சேர்த்துளளனர்.

ஈராக்கின் எண்ணெய் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயைக கொண்டு இந்த இழப்பீடுகள் வழங்கப்படும்.

2003இல் ஆட்சியிலிருந்து சதாம் ஹுசேன் அகற்றப்படுவதற்கு முன்பு, இறந்த குவைத் கைதிகளின் எண்ணிக்கையை உறுதி செய்ய ஈராக் மறுப்பு தெரிவித்திருந்தது.

இதுவரை பல்வேறு நாட்டு அரசுகள, நிறுவனங்கள், தனிநபர்களுக்கு மொத்தம் ரூ.85,500 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.2.34லட்சம் கோடி இழப்பீடு வழங்க இழப்பீட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. (து)

உலக தரிசனம்

# இன்று ஒரு தகவல்

## சினத்தின் பயன்

வைகுண்டத்தில் ஒருநாள். இப்படி நான் ஆரம்பித்ததும்... உடனே "நீங்கள் அங்கே சென்று வந்தீர்களா?" என்றெல்லாம் கேட்கக் கூடாது. புராணக் கதைகள் எல்லாம் சில உண்மைகளையும் தத்துவங்களையும் விளங்குவதற்காக சொல்லப்பட்டவை. அதனால் அவற்றையெல்லாம் கேட்பதோடு வைத்துக் கொள்ள வேண்டும்.

இராவண சங்காரம் செய்வதாக மகா விஸ்ணு தேவர்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டார். எல்லோரையும் போல் வாக்குக் கொடுத்து விட்டு அதன் பின்பு அதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தார். அவருக்கு என்ன பிரச்சினை என்றால்...பூமியில் வந்து மனிதனாகப் பிறக்க வேண்டுமே... அதற்கு என்னசெய்வது? இப்படி யோசித்துக்கொண்டே அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் விசுவாமித்திரர் விஸ்ணுவைப் பார்ப்பதற்காக வைகுண்டத்திற்கு வந்துசேர்ந்தார். விசுவாமித்திரர் மிகவும் பெரியவர் அல்லவா? அதனால் விஸ்ணுவும் லட்சுமியும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை கொடுத்தார்கள். வரும் விருந்தாளிகளுக்கென்றே ஒரு சிம்மாசனம் போட்டு வைத்திருந்தனர். அதைக்காட்டி "இதில் அம ருங்கள்" என்றனர்.

விசுவாமித்திரர் அந்த சிம்மாசனத்திற்கு அருகே சென்றார். அதில உட்காரப்போனார். அப்போது விஸ்ணு அவரைப் பார்த்து "பார்த்து அமருங்கள்" என்றார். விசுவாமித்திரருக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அதில் உட்கார்ந்தார். அவ்வளவு தான் அப்படியே அந்த சிம்மாசனம் குப்புறக் கவிழ்ந்துவிட்டது. விசு வாமித்திரர் மட்டும் என்ன அமர்ந்திருப்பாரா? அவரும் குப்புற விழுந்து விட்டார். முகத்தில் நல்ல அடி.

தடவிக்கொண்டே எழுந்தார். "நான்தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேனே? என்றார் விஸ்ணு. விசுவாமித்திரர் யோசித்தார். மீணடும் அந்த சிம்மாசனத்தில் அமர்ந்தார். அது மீண் டும் கீழே தள்ளிவிட்டது. முதல் முறையாவது கொஞ்சம் இலேசான அடி. இந்த முறை கொஞ்சம் பலமாகவே அடிபட்டது.

விசுவாமித்திரருக்குக் கோபம்வர ஆரம்பித்தது. "நாராயணா? இது என்ன வேடிக்கை? இப்போது உன்னை சபிக்கப் போகிறேன் பார்" என்றார். 'நான்தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேனே' என்றார் அவர். "அது...இன்னோர்முறை ஏறி உட்கார்ந்து பார்ப்போம்" என்று அருகில் போனார். முந்தைய முறையைவிட இன்னும் வேகமாக குப்புற தள்ளிவிட்டது சிம்மாசனம்.

எததனை முறை முகத்திலேயே அடிவாங்குவார்? கோபம் வந்துவிட்டது. விசுவாமித்திரருக்கு கோபம் வந்தால் சும்மாவா? உடனே சாபம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். உன்னை சபித்து விட்டுத்தான் மறுவேலை என்று கையைத்தூக்கி "நீ பூலோகத்தில் போய் மனிதனாகப் பிறக்கக் கடவது" எனறு சாபம் கொடுத்துவிட்டார். விஸ்ணு இப்படி ஒரு சாபத்திற்காகத் தான் காத்துக் கொண்டிருந்தார். " உங்களுடைய சாபத்திற்கு மிக்கநன்றி! நான் பூலோகத்தில் பிறப்பதற்கு ஒரு வியாஜம் வேண்டும் என்று தான் காத்துக் கொண்டிருந்தேன். நான்தான் பார்த்து அமருங்கள் என்று சொன்னேன். நீங்கள் பார்க்கவில்லை. அதோ அங்கே பாருங்கள்" என்று சுட்டிக் காட்டினார்.

விஸணுகாட்டிய திசையில் விசுவாமித்திரர் பார்த்தார். அங்கே பார்ததால்... ஒரு அழகான சிம்மாசனம்! அதில் அரிச்சந்திர மகாராஜா உட்கார்ந்திருந்தார். "சத்தியத்திற்கு முன்னால் அசத்தியம் உட்காரமுடியுமா? அரசு, மனைவி, மகன எல்லாவற்றையும் இழந் திருந்தாலும்கூட ஒரு பொய்கூட சொல்லமாட்டேன் என்றாரே அதனால்தான் அவர் இன்று வைகுண்டத்தில் இருக்கிறார்" என்றார் விஸ்ணு.

உடனே விசுவாமித்திரர் "நான் செய்த தவறுக்கு என்ன பிராயச்சித்தம? என்றார். "நீங்கள்தான் அரிச்சநதிரனையும் மனைவியையும் பிரித்து வைத்தீகள். அந்தபாவம் நீங்குவதற்கு ஒருவழி சொல்கின்றேன். நான் உங்கள் சாபப்படி ராமனாகப் பிறக்கிறேன். என்னையும் லக்சுமியையும் சேர்த்துவையுங்கள். பிரித்துவைத்த பாவம சேர்த்து வைத்தால் சரியாகிவிடும" என்றார். அதனால் தான் விசுவாமித்திரர் ராமனை அழைத்துக் கொண்டு போய் சீதையுடன் திருமணம் செய்து வைத்தார்.

இது ஒரு பெரியவர் சொன்ன விபரம். இதிலிருந்து நாம் ஒரு விபரத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். விசுவாமித்திரருக்கு விஸ்ணு உணடாக்கியது மாதிரி சிலருக்குக் கோபத்தை உண்டாக்கினாலே நாம எதிர்பார்க்கும் பலனை அடைந்து விடமுடியும். அதில் அனுப வம் உள்ள ஒருவர் ஒரு விபரம் சொன்னார்.

தீபாவளி நேரத்தில் மனைவியை அழைத்துக்கொண்டு புடவைக்கடைக்குச் சொன்றாராம். விலை கூடிய புடவையாக புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தாராம் அவர். எல்லாம் 1000 ரூபாவுக்கு கூடிய விலை. இவர் பக்கத்தில் நின்றுகொண்டே "பார்த்து வாங்கு... பார்த்துவாங்கு" என்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாராம்.

மனைவிக்குக் கோபம் வந்துவிட்டது "என்ன இது? பார்த்து வாங்கு என்கிறீர்கள்" என்று பல்லைக்கடித்திருக்கிறார். இவர் பொறுமையாக "அதற்கில்லை... அதே கலரில் எங்கள் அம்மாவிடமும புடவை உள்ளது. அதை யோசித்துப்பார்த்து வாங்கு" என்று சொன்னேன் என்றார்.

உடனே அவருக்குக் கோபம் எல்லைமீறிப் போய்விட்டது. "அப்படியென்றால் புடவையே வேண்டாம் வாருங்கள்" என்று வீட்டுக்கு வந்துவிட்டார். விசுவாமித்திரர் கோபத்தினால் விஸ்ணு உலகத்திற்குவந்து சேர்ந்தார். சம்சார கோபத்தினால் நம் ஆள் சவுகரியமாக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஏற்றப்பட்ட புலிக்கொடியை அகற்ற கண்காணிப்புக்குழு தவறியுள்ளது

## -பிரிகேடியர் தயா ரத்னாயக்க

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஏற்றப்பட்ட புலிக்கொடியை அகற்ற கண்காணிப்புக் குழு தவறியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புலிக்கொடியானது இந்து கலாசார நிலையத்தின் திறப்புவிழாவின்போது ஏற்றப்பட்டது.

இது போர் நிறுத்த உடன் படிக்கையை மீறும் செயலாகும் என்றும் அதனை உடனடியாக அகற்று மாறும் கண்காணிப்புக் குழுவிடம் கோரப்பட்டது.

இதனையடுத்து, கொடியை இறக்குமாறு கண்காணிப்புக் குழுவினர் புலிகளைக் கேட்டிருந்தும் அவர்கள் அதனைப் புறக்கணித்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ற-6)

# பச்சோந்தியாக இலங்கை அரசு!

# அவதானமாக இருக்குமாறு இந்தியாவை சம்பந்தன் எம்.பி.எச்சரிக்கிறார்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் உதவியைக்கோரும் அரசு, பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதில் மும்முரமாகச் செயற்படுகின்றது.

எனவே இலங்கை அரசின் கபடவலைக்குள் இந்தியா சிக்கிவிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இதனை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக இலங்கை அரசிடம் ஸ்திரமான ஒருநிலைப்பாடு இல்லை. நாட்டுக்கு நாடு மாறுபட்ட கருத்துக்களை இலங்கை தெரிவிக்கின்றது.

இரட்டைக் குரலில் பேசும் அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. அதற்கு அவர்களிடம் உருப்படியான திட்டங்களும் இல்லை - என்றும் சம்பந்தன் எம்.பி.சாடினார்.

இந்தியாவுக்கு விஜயம்செய்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம் இந்தவிடயத்தில் இந்தியாவின் பங்களிப்பை நிலைப்பாட்டை அதிகரிக்கவேண்டும் தீவிரமாக்கவேண்டும் என்றெல்லாம் மண்டியிடுகின்றார்.

அதே கதிர்காமர் பாகிஸ்தானுக்குச் சென்று அவரகளின் புகழ்பாடுகின்றார். தக்கசமயத்தில் பாகிஸ்தான் உதவியிருக்காவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதோ தமிழீழத்தை அமைத்திருப்பார்கள் என்று பாகிஸ்தானை சந்தோசப்படுத்தி பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள மும்முரமாகச் செயற்படுகின்றார்.

அதோடு நின்றுவிடவில்லை. சீனாவுக்கு சென்றபோது சீன அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியமைக்காக சீன்ாவுக்கு நன்றி தெரிவிக்கின்றார்.

நாட்டுக்கு நாடு தேசத்திற்கு தேசம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நிறத்தை மாற்றிக்கொள்ளும் இலங்கை அரசின் சூழ்ச்சி வலைக்குள் இந்தியா சிக்கிவிடக் கூடாது - என்று சம்பந்தன் எம்.பி.மேலும் கூறினார்.

இவ்வாறு குழப்பமான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஒரு நோக்கத்தோடு அல்லாமல் பலவிதமான குரல்களில் பலவிதமாக செயற்பட்டு வருகின்றது. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கத்திடம் ஸ்திரத் தன்மை இல்லை.

புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறைப் பொறுபபாளர் கௌசல்யன் படுகொலையை அரசாங்கமும் கண்டித்தது. அதே போன்று ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானும் கண்டித்திருந்தார். ஆனால் கொபி அனான் அவ்வாறு கண்டனம் தெரிவித்ததை அரசாங்கம் கண்டித்திருககின்றது. இதற்கு காரணம் என்ன? ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்த பின்னர் தான், கொபி அனானின் கண்டனத்தை கணடித்து அரசாங்கம் அறிக்கை வெளியிட டிருக்கிறது.



இது ஒருபுறமிருக்க சமாதான முயற்சியை குழப்புவது தான் ஜே.வி.பி.யின் வேலை. அவர்கள் இப்போது அரசாங்கத்தையே கைப்பற்ற முற்படுகின்றனர். ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் சமாதான பேச்சுக்கு குந்தகம் விளைவிக்கின்றன. உலக வங்கியின வதிவிடப் பிரதி நிதிக்கு எதிராக ஜே.வி.பி.யும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் எடுத்த நடவடிக்கைகள் சமாதான பேச்சு குறித்த அவர்களின் எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் இந்த நடவடிக்கைகள் ஊறு விளைவிக்கின்றன.

விடுதலைப் புலிகள்-இந்தியா உறவுவிடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமிடையே காணப்படுகின்ற சில சாதகமற்ற சூழ்நிலைகளை பயன்படுத்தி, புலிகளுக்கு விரோதமான சில செயற்பாடுகளுக்கு தூபமிடப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் இரட்டை வேடங்களுக்கு இந்தியா பலியாகிவிடக் கூடாது. சர்வதேச நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதமாக பேசி வருகின்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு ஆபத்தானது.

அரசுக்குள் இருக்கின்ற ஜே.வி.பி. இடைக்கால நிர்வாகத்தை எதிர்க்கின்றது.

சுனாமி நிவாரண பணிக்காக அமைக்கப்படவுள்ள பொது கட்டமைப்பைக் கூட ஜே.வி.பி. எதிர்க்கின்றது.

இதனால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில் மாறுபட்ட போக்குகளும் பேச்சுகளும், குழப்பத்தை உண்டு பண்ணுகின்றன. அதற்காக பாராளுமன்றததில் ஒரு நாள் விவாதம் ஒன்றை நடத்த வேண்டும். என்று சமபந்தன் மேலும் கூறினார். (க)

# பல்கலை மாணவர்கள்-பொலிஸார் கொழும்பில் மோதல்: 3 பேர் காயம்

தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதனை எதிர்த்து கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக கழக மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதுவரை பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் போராட்டங்களை நடத்தி வந்த மாணவர்கள் இன்று ஹைலெவல் வீதியை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்த முற்பட்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15வது வருட தேசிய மாநாடு மஹரகமை இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வருகை தரவுள்ளதால் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலந்து செல்லுமாறு பொலிஸார் உத்தரவிட்டனர்.

இதனையடுத்து மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. மாணவர்கள் பொலிஸாரை நோக்கி கற்களையும் பொல்லுகளையும் வீசினர். மாணவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதுடன் றப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்தி சுட்டனர்.

இதில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர். சந்தேகத்தின் பேரில் இரு மாணவர்கள் கைது செயயப்பட்டுள்ளனர். இதேவேளை இரு மாணவ குழுக்களுககு இடையே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக கொழும்பு பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. (ப)

## கண்டியில் கடத்தப்பட்ட வான் வவுனியாவில் மீட்பு

2004 ஆம் ஆண்டின் இறுதியில் கண்டியிலிருந்து வான கடத்தப்பட்டு சாரதி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதிவாய்ந்த இந்த வானை வாடகைக்கு அமர்த்தியவர்களே சாரதியை கொலை செய்துவிட்டு வானை கடத்தி சென்றுள்ளனர்.

நீண்ட காலமாக மறைத்து வைக்கப்பட்டு இருந்த இந்த வானின் நிறம் மற்றும் இலக்கங்கள் மாற்றப்பட்டு வவுனியா கொண்டுவரப்பட்டு ஓமந்தை சாவடி வழியாக வன்னிக்கு கொண்டு செல்ல முயன்றபோது வான் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணை நடத்தினர். அப்போது இந்த கொலை விடயங்கள் அம்பலமாகியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு மேலும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர். (ப-4)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 6



### அத்தியாயம் III

ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டின் மீதான விவாதம் ஏழு நாட்களுக்கு நீடிக்க வேண்டும். அதன் பின்னர் சபை சட்ட மூலத்தைப் பத்தொன்பது நாட்கள் குழு நிலையில் ஆய்வு செய்ய வேண்டும். ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான நடவடிக்கைகளை இறுதிநாளன்று தேவையேற்படின் இடையீடின்றித் தொடர்வதற்கும் நிலையியற் கட்டளை 70(6) இன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு நாளில் ஒத்திவைப்புக்கான பிரேரணையோ தாமதப்படுத்தும் நோக்குடைய ஏதேனும் பிரேரணையோ பிரேரிக்கப்பட முடியாதென்பதுடன் ஒத்திவைப்பு நேரத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பிரேரணையொன்றுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப் பட்டிருப்பின், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான நடவடிக்கைகள் பி.ப.8.30 மணிக்கு முடிவடையும் வரை அது தள்ளிவைக்கப்படவேண்டும்.

### *நிலையியற் கட்டளை 135*

நிலையியற் கட்டளைகளில் ஒன்றை அல்லது அதற்குக் கூடியவற்றை இடைநிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படுகின்றது. அமர்வு நேரங்களை நீடிக்க வேண்டிய தேவை அல்லது அமர்வு நாட்களை மாற்ற வேண்டிய தேவை அத்தகைய பொதுவான சந்தர்ப்பங்களாகும். நிலையியற் கட்டளை 135 தான் சபை அதன் அலுவலை நடத்துவதில் இசைந்து கொடுக்க அனுமதிக்கின்றது. ஏதேனும் விசேட அலு வலைப் பரிசீலனை செய்கின்ற அல்லது முடிவு செய்கின்ற நோக்கத்துக்காக மட்டும் நிலையியற் கட்டளைகளில் ஒன்றை அல்லது அதற்குக் கூடியவற்றை இடைநிறுத்துவதற்கு நிலையியற் கட்டளை 135 அனுமதிக்கின்றது.

நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்கான ஒரு பிரேரணை அமைச்சரவையின் ஓர் அமைச்சரால் (பொது அலுவல்களின் ஆரம்பத்தில்) பிரேரிக்கப்பட வேண்டும். இதனைப் பெரும்பாலும் சபை முதல்வரே செய்கின்றார். இதற்கு மிக அரிதாகவே எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு எதிர்க்கப்படினும் சமுகமளித்துள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் மூலம் அது தீர்க்கப்படலாம். எனினும் தனியார் உறுப்பினர் ஒருவரால் அது பிரேரிக்கப்பட்டால் பெரும்பான்மை மூலம் அது நிறைவேற்றப்பட வேண்டும். இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரேரணைக்குச் சார்பாக வாக்களிக்க வேண்டும். எனவே வழமையான அமர்வு நாள் ஒன்றின் நேரத்தை நீடிக்க வேண்டும் என உத்தேசிக்கப்பட்டால் நிலையியற் கட்டளை 7 ஐ இடைநிறுத்துகின்ற ஒரு பிரேரணை பிரேரிக்கப்படவேண்டும். அதேவகையில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான விவாதத்தின் போது அமர்வு நேரத்தில் நீடிக்க உத்தேசித்தால் நிலையியற் கட்டளை 70(2) இடைநிறுத்தப்பட வேண்டும். ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்ட நாட்களில் பி.ப.6.00மணிக்கு முன்னர் வேறு ஏதேனும் அலுவல் இனம் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டால் நிலையியற்கட்டளை 70(3) இடை நிறுத்தப்படவேண்டும்.

### *ஒரு விசேட கூட்டம்*

நிலையியற் கட்டளை 14 இன் கீழ் விசேட அமர்வொன்று அழைக்கப்படும் போது அவ்வழைப்பு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன் அந்நாளில் அலுவலுக்கு முன்னர், அமர்வு நேரங்களையும் ஒத்திவைப்புக்கான நேரத்தையும் குறித்துரைக்கின்ற நடைமுறை சார்ந்த பிரேரணையொன்றும் பிரேரிக்கப்பட வேண்டும். மேற்படி நிலையியற் கட்டளையின் கீழான விசேட கூட்டமொன்று 2000.08.03 ஆம் தேதியன்று வரைபு அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஜனாதிபதி சமர்ப்பிப்பதற்காகக் கூட்டப்பட்டது. எனினும் இச் சட்ட மூலம் சட்டமாக நிறைவேற்றப்படவில்லை.

### *அலுவல் மொழி*

இலங்கையில் அரச கரும மொழி சிங்களம் அரசியலமைப்புக்கான ஒரு திருத்தத்தின் மூலம் தமிழும் ஓர் அரச கரும மொழியாக்கப்பட்டதுடன் ஆங்கிலத்துக்கு இணைப்பு மொழியென்ற அந்தஸ்தும் வழங்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் அலுவல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படுகின்றது. விவாதங்களின் போது மூன்று மொழிகளிலும் சமகால உரை பெயர்ப்புக் கிடைப்பதற்குள்ளது. உரைகள் அவை ஆற்றப்படும் மொழியில் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) அறிக்கையிடப்படுகின்றன.

ஒழுங்குப் பத்திரம் மூன்று மொழிகளிலும் கிடைக்கச் செய்யப்படுகின்றது. பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவோர் அறிக்கையும் அல்லது பத்திரமும் மூன்று மொழிகளிலும் பிரதிகளைக் கொண்டதாயிருக்க வேண்டும்.

### *அலுவல்களின் நிகழ்ச்சியமைப்பு*

நாளுக்கான அலுவல் இனங்கள் எல்லாம் நிரற்படுத்தப்பட்டு நிலையியற் கட்டளை 19 இல் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கில் அதாவது பின்வரும் ஒழுங்கில் எடுக்கப்பட வேண்டும்.

**(1) ஒரு புதிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்தல**

ஒரு புதிய உறுப்பினர் சபாநாயகரின் முன்னர் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்ய வேண்டும். அதன்பின்னர் பதிவேட்டில் அவரின் பெயர் பதியப்பட்டு அவரின் மூப்புக்கிணங்க ஆசனமொன்று அவருக்கு ஒதுக்கப்படுகின்றது.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் சபாநாயகர் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்தபின்னர் உறுப்பினர்கள் கூட்டாக இப்பிரமாணத்தைச் செய்கின்றனர்.

**(2) ஜனாதிபதியின் செய்திகள்**

முக்கியமான பொது விடயங்கள் பற்றி ஜனாதிபதியின் செய்திகள் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டு அவை சபாநாயகரால் சபையில் வாசிக்கப்படுகின்றன. அவசரகால நிலையொன்றின் பிரகடனம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் என்பவை இவற்றிலடங்கும்.

**(3) சபாநாயகரின் அறிவித்தல்கள்**

பெரும்பாலான, அறிவித்தல்கள் அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலங்களின் சான்றுப்படுத்தல்கள், பாராளுமன்ற உறுப்பினரொருவர் காலமாகியமை, மாகாண சபைகளுக்குச் சட்டமூலங்கள் ஆற்றுப்படுத்தப்படுதல், அத்தகைய சட்டமூலங்கள் பற்றிய மாகாண சபைகளின் அறிக்கைகள் உயர் நீதிமன்றத்தில் சட்டமூலங்கள் ஆட்சேபிக்கப்படுதல், அத்தகைய சட்டமூலங்கள் மீதான நீதிமன்றத் தீர்ப்புகள் என்பவை தொடர்பானவை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் போன்ற அலுவலர்களின் அறிக்கைகளும் சபாநாயகரால் சமர்ப்பிக்கப்படுகின்றன. பாராளுமன்றம் தொடர்பான எல்லா விடயங்களிலும் கூடச் சபாநாயகர் அறிவித்தல்களைச் செய்கின்றார்.

**(4) பத்திரங்கள் சமர்ப்பித்தல்**

சபாநாயகரால், ஓர் அமைச்சரால் அல்லது ஒரு பிரதி அமைச்சரால் மட்டும் தான் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படலாம். சட்டப்படியான ஒரு தேவையாகப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படலாம். எ-கா-விதிகள்.

ஒழுங்கு விதிகள், சட்டங்களின் கீழான கட்டளைகள் அல்லது அவை மத்திய வங்கி அறிக்கை போன்ற வருடாந்த அறிக்கைகளாக அல்லது நிதிக் கூற்றுக்களாக இருக்கலாம். பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற போது சபாநாயகரால், அமைச்சரால் அல்லது பிரதி அமைச்சரால் குறுகிய விளக்கமொன்று அளிக்கப்படலாம். எனினும் சமர்ப்பிக்கப்படுவதன் பேரில்தானே விவாதம் எதுவும் இடம்பெறலாகாது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் ஏனைய சபைகளினதும் ஆண்டறிக்கைகளும், மனித உரிமைகள் ஆணைக்குழு, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் ஆகிய பல்வேறு அமைப்புகளின் அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம்.

(தொடரும்)

# 60 பிரதேச செயலருக்கு வெற்றிடங்கள் உள்ளன

(கொழும்பு)

நாடு முழுவதும் 60 பிரதேச செயலாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இதனால் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டு நடத்துவதற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பிரதேச செயலகங்களில் தமது தேவைகளை நிறைவேற்றச் செல்லும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன், பிரதேச செயலாளர்கள் இல்லாதமையினால் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் உயர் அதிகாரி கருத்துத் தெரிவித்தபோது,

60 பிரதேச செயலாளர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவுவதாக குறிப்பிட்டார். நிர்வாக சேவையில் முதலாம் தர அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதனாலேயே இந்த நிலை தோன்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு உரிய அதிகாரிகளை நியமிக்குமாறு அரசசேவை ஆணைக்குழுவிடம் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ள போதிலும் இதுவரை அது செயல்படுத்தப்படவில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (சு-9)

# "பேரன்பு ஆண்டவரிடம் உள்ளது, மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு"



## தவக்காலச் சிந்தனை

கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவில் வாழ்வதாகும். உயிர்பும் வாழ்வும் நானே (யோவா 11:25) என்ற இயேசுவின் வார்த்தையை நம்பி அவரில் வாழ்வோர் நிறைவாழவு என்னும் விண்ணக வாழ்வைப பெறுவார்கள்ளூ அதை இம்மண்ணகத்திலேயே அனுபவிக்கத் தொடங்குவார்கள். பாலைவனத்தைக் கடக்க நினைப்பவர் ஒரு பேரீட்சைமர நிழலில் உறங்கிக் கொண்டிருப் பதைப்போல, இயேசுவில் கிடைக் கும் நிறை வாழ்வுக்கா இவ் வுலக "ல் பயணம் செய்யும் நாம், பளபளக்கும் மாய ஜாலங்களால் பார்வ்வையை மேயவிட்டுச் சிற்றின்ப செயல்களில் சிக்கிக் கொள்ளவதற்காக இவ்வுலகில் பிறக்கவில்லை. கல்லறையோடு காணாமல் போவ தற்காக கடவுள் மனிதர்களைப் படைப்பதில்லை. காலங் களைக் கடந்து அவரோடு கூடிவாழும் பெருவாழ்வுக்காகவே நம்மைப் படைத்தார். அவ்வாழ்வின்சுவையை, உயிர்த்தது இன்னும் நம்முடன் வாழும் கிறிஸ்து வழியாக, இவ்வுலக "லேயே அனுபவிக்க முடியும்.

உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும எவரும் என்றுமே சாகமாட்டார் (யோவா 1:26) என்னும் இயேசுவின் வாக்கை இதயத்தில் ஏற்று, அவரில் நிறை வாழ்வு பெற விரும்புவோர் விசுவாச வாழ்கை வாழ்வார்கள். இவர்கள வாழ்வு இன்னல் இடுக்கண்களை அவர்களுக்குக் கொண்டு வந்தாலும், இதயத்தில் அமைதியும் மனத்தில் மகிழ்வும் அனுபவிப்பார்கள். பழக்குலைகள் தள்ளும் பசுமையான மரமொன்று, மழை தண்ணீர் இன்றி காய்ந்து கிடக்கும்கட்-டாந்தரையிலே நீண்டுயர்ந்து நிற்கிறது என்றால், அதன் ஆணிவேர்கள் நிலத்திற்கும் கீழே பாதாளத்தில் சுரக்கும் நீரூற்றைத் தொடுகின்றன என்பதே அதற்குக் காரணம். அதுபோல, ஆவியில் விசுசாச வாழ்வு நடத்துவோர் கிறிஸ்து எனும் வாழ்வு தரும் நீரூற்றில் ஒன்றிணைவதால், அவர்கள் துன்பங்களை இடையிலும் மன நிறவுடன் வாழ்கிறர்கள்.

காவலன்

அன்பு வாசகர்களே!
எதிர்வரும் 14.03.2005இல் இருந்து விவாத அரங்கு மீண்டும் பிரசுரமாகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விவாத அரங்கு - 7

விடயம்
தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீரபடுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வமும் சேர்வது நாடு - குறள்

வலம்புரி

# விவசாயச் செய்கையில் பெரும் பின்னடைவு

'வானம்பார்த்த பூமியாக' என்பது தமிழ்ப் பழமொழி. இப்பழமொழி வழக்கத்தில் இருந்த போதிலும் அதனது அர்த்தத்தை பலர் புரிந்து கொள்ளவில்லை.

வானம் பார்த்த பூமியாக நமது மண்வளம் இருக்கக்கூடாது என்பதன் அடிப்படையில் எழுந்ததே மேற்போந்த பழமொழியாகும். அதாவது மண்வளம் வீணாக விடப்படுமாயின் அதுவே இந்த நாட்டின் முதலாவது சீரழிவாக இருக்கும். எப்போதும் மண்ணில் பயிர்கள் செழித்திருக்க வேண்டும்.

பயன்தரும் மரங்கள் வானத்தின் பார்வைபூமியில் படுவதை தடுக்கவேண்டும். இவ்வாறு எங்கு பார்த்தாலும் பச்சை பசேலாக பயிரினங்களும் பயன்தரு மரங்களும் இந்தமண்ணில் வளந்திருக்குமாயின் பூமியைப்பார்க்கும் வாய்ப்பு வானத்திற்கு கிடைக்கும் சந்தர்ப்பம் மிகக்குறைவாகவே இருக்கும்.

ஆனால் சமகாலத்தில் மண்வளம் வீணாக விடப்பட்டுள்ளது. புல்பூண்டுகளும், எருக்கிலை, கள்ளி போன்ற தாவரங்களுமே நமது மண்ணின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளன.

அதேநேரம் குடியிருப்புக் காணிகள் வெறுமையாக வானத்தைப் பார்த்தவாறு காட்சிதருவது வேதனைக்குரியது. வீட்டுத்தோட்டம் என்ற முறைமை இல்லாது போனமையே இதற்கு காரணமாகும். ஒரு காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் வீட்டுத்தோட்டத்தில் பெரும் நாட்டம்கொண்டனர். இதனால் அவர்கள் தரமான மரக்கறிகளை குடியிருப்புக்காணிகளிலேயே உற்பத்தி செய்தனர்.

உற்பத்தியின் மிகையை அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்து உண்டு மகிழ்ந்தனர். ஆனால் இப்போதெல்லாம் அந்த முறை மலை ஏறிவிட்டது. இயந்திர உலகமாக நமது மண்ணும் மாறிவிட்டது.

வீட்டுத்தோட்டம் செய்வது நாகரிகத்தின் பின்னடைவாகக் கருதப்படுகிறது. சந்தைகளில் மரக்கறிகளை வாங்கிக்கொள்வதே நாகரிகமானதாகவும், பெருமையாகவும் எண்ணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் நோய்நிலையில் முதன்மை இடத்தை புற்றுநோய் பிடித்திருப்பது யாவரும் அறிந்த விடயமே. இவ்விதம் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்களை தேடிய மருத்துவவியலாளர்கள் முன்வைத்தவை அதிர்ச்சிதரக் கூடியவையாகும்.

இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் பயன்படுத்தப்பட்ட மரக்கறிகளை உண்பதன் ஊடாகவே புற்றுநோய் ஏற்படுவதை அவர்கள் கண்டறிந்தனர்.

உண்மைகள் ஆதாரபூர்வமாக அறிவிக்கப்பட்டபோதிலும் அது விடயத்தில் மக்களின் அறிவுதிறன் மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்படாமைக்கு ஏதேஒருகாரணம் இருக்கவே செய்யும். அது எதுவெனில் விவசாயச்செய்கைஒரு கௌரவக் குறைவான தொழிலாக க்ருதப்படும் பரிதாப நிலையே ஆகும்.

இத்தகைய தவறான எண்ணங்களால் வளம் நிறைந்த மண் வானம் பார்த்த பூமியாக இருப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதால், வீட்டுத்தோட்ட முறைமை மீளவும் அறிமுகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் உகந்த திட்டங்களை உரியவர்கள் தயாரித்து நடைமுறைப்படுத்தவேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

# கிழக்கில் இடம்பெறும் படுகொலைகள் தொடர்பில் ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## பாராளுமன்றில் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழர், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் தொடர்ந்தும் படுகொலை செய்யப் பட்டு வருவது தொடர்பில் ஜனாதி பதி கூடிய கவனம செலுத்த் வேண் டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் விசேட உரை யாற்றிய ஜே.வி.பியின் பாராளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ,

நாட்டின் சகல பாதுகாப்பிற்கும் தேசியப் பாதுகாப்பிற்கும் ஜனாதிபதியே பொறுப்பானவர். எனவே, மேற்படி படுகொலைகள் தொடர்பில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இரத்தம் குடிக்கும் குழுக்களினால் நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் கொலை செய்யப்படுவதை அனுமதிக்கும் உரிமை அரசாங்கத்திற்குக கிடையாது. பாதுகாப்புப் படையினரின் கைகள் போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் கட்டப்பட்டுள்ளது. இதனால் வன்முறைகளை ஒழிப்பதற்கு வழியில்லை.

இச் சம்பவங்கள் குறித்து கண்காணிப்புக்குழுவினரும் பாராமுகம் காட்டிவருகின்றனர். ஆனால், புலிகளின் தலைவர்கள் கொல்லப்படும்போது மட்டும் கூடிய அக்கறை செலுத் துகின்றனர். சுனாமி நிவாரணம் தொடர்பில் புலிகளும் அரசும் இணங்கிச் செயற்பட வேண்டும் என கூறும் வெளிநாட்டவர்களும் இதற்கு செவிசாய்க்கவில்லை.



மேலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு எந்தவொரு உலகத தலைவர்களும் கவலை தெரிவிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, கிழக்கில் தொடரும் படுகொலைகள் தொடர்பில் பாராளுமன்ற விவாதம் ஒன்று நடாத்தப்பட வேண்டுமென ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-6)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் இதய சுத்தியுடன் செயற்படுவது அவசியம்

## காரைநகர் சமுர்த்தி தலைமை முகாமையாளர் வலியுறுத்து

சமுாத்தி திட்டம் வெற்றியளிக்க வேண்டுமெனில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் திருமதி வி.பத்ம தயாளன தெரிவித்தார்.



கடந்த புதன்கிழமை காரைநகர் சமுர்த்திவங்கி கட் டுப்பாட்டுச் சபையின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

முகாமையாளர் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

சமுர்த்தி வங்கியானது ஏனைய வங்கிகளைப்போல் அல்லாது வறிய மக்களின் சேமிப்பினையே மூலதனமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இதனால் இம் மூலதனத்தை உரியவாறு பயன்படுத்தி வறிய மக்களின் வாழ்வை மேம்படுத்த நாம் அனைவரும் இதய சுத்தியுடன் பங்காற்ற வேண்டும். இதற்கு வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையும் ஒத் துழைக்க வேண்டும்.

சமுர்த்தி திட்டத்தினை பொறுத்தளவில் மக்கள் கருத் திட்டத்தின் மூலம் நாம் எந்தவொரு அபிவிருத்தியை மேற்கொண்டாலும் அதிலே 75வீதமே பணமாகக் கிடைக்கும். இதில் மிகுதி 25 வீதமும் மக்கள் பங்களிப்புடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறுதான் குறித்த கருத் திட்டத்தினை பூர்த்திசெய்ய முடியும்.

இவ்வாறுதான் கடந்த வருடமும் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன.

அதேபோல் இவ்வருடம் காரைநகரில் புதிய சமுர்த்தி வங்கி கட்டடம் அமைக்கப்பட வுள்ளது. அதற்கும் மக்கள் பங் களிப்பு பெற்றுக்கொள்வது கட் டாயம் ஆகும்.

இதற்கு வங்கிக் கட்டுப்பாட் டுச்சபை உறுப்பினர்கள் உற சாகமாக செயற்படல் வேண்டும். எந்தச் சமுர்த்திச் செயலணி ஒப்பந்தம் மேற்கொண்டாலும் அதில் அனைத்துப் பொதுமக்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

தனித்து சமுர்த்தி உத்தி யோத்தர்கள் மட்டும் சேவையிலீடுபட்டால் எந்தத்திட்டமும் வெற்றியளிக்கப்படமாட்டாது. அவாகளின் அர்ப்பணப்புடன் பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தாலேயே நூறு வீதமும் வெற்றியளிக்கும். இதன்மூலம் வறிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் வறுமையையும் தணிக்கமுடியும். ஒருவருக்கு இலவசமாக ஒன்றைக் கொடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் எதனையும் சாதித்துவிட முடியாது. ஆதலால் நாம் ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது அவர்களையும் ஒன்றிணைத்து செயற்படுத்தும் போது அத் திட்டத்தின் பெறுமதிகளும் நன்மைகளும் அம் மக்களால் உணரப்படும்.

அந்த வேளையில் குறித்த திட்டத்தினையும் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனையும் தோன்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வழியேற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-246)

# தனியார் பல்கலையை நிறுவும் திட்டமில்லை

தனியார் மருத்துவக் கல்லூரிகளையோ அல்லது எந்தவொரு தனியார் பல்கலைக்கழகத்தையோ புதிதாக நிறுவுவதற்கு தீர்மானிக்கப்படவில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

பல்வேறு அரசியல் குழுக்கள் அரசியல் நோக்கங்களை அடைவதற்காக பல்கலைக்கழக மாணவர்களை தூண்டிவிட முயற்சிப்பதாகவும் அது தெரிவித்திருக்கிறது.

அரசாங்கம் கல்வியை தனியார் மயப்படுத்த முற்பட்டு வருவதாகக்கூறி பொயப் பிரசாரம் செய்வதன் மூலம் இக் குழுக்கள் லாபம் தேட முயல்கின்றன.

கல்வித்துறையை தனியார் மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

# நால்வர் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேசத்தில் கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர் ஒருவர் உட்பட நால்வர் தாக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு தனியார் தொலைக்காட்சியொன்றின் நிருபரான அப்துல் லத்தீப், அவரது உதவியாளர் ஊடகவியலாளர் எம்.சுபைரின் புதல்வன் ரிஸ்னாஸ் ஆகிய ஊடகத்துறையுடன் தொடர்புடையவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளரான எம்.பரீத் ஆகியோரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன் மாதிரி இலட்சினையொன்றையும் ஆர்ப்பாட்ட முடிவில் தீவைத்து எரித்துள்ளனர். ஊடகத்துறையினருடன் தொடர்புடையவர்கள் தாக்கப்பட்டபோது அங்கு விரைந்த பொலிஸார் அவர்களை மீட்டனர். இதனையடுத்து ஏனைய ஊடகவியலாளர்களும் தமது பாதுகாப்பின் நிமித்தம் வெளியேறிவிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக்குழுவினரே இருந்ததாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். இதன் காரணமாகவே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் தாக்கப்பட்டதாகக் கூறும் அப்பிரதேச மக்கள் கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணி என்ற அமைப்பு ஒரு அநாமோதய அமைப்பு என்றும் அங்கு சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-4)

# வடமராட்சியில் சுனாமியால் 74 சதவீத வீடுகள் பாதிப்பு

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தம் காரணமாக யாழ்.மாவட்டத்தில் 7 ஆயிரத்து 794 வீடுகள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக, வடமராட்சி கிழக்கு உட்பட வடமராட்சிப் பகுதி கரையோரப்பகுதிகளில் இருந்த 74 சதவீதமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்தும் பகுதியாகப் பாதிப்படைந்தும் உள்ளன.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப்பகுதியில் 300 மீற்றரிற்கு அப்பால் மட்டுமே மக்கள் குடியமர்ந்தப்படுவர் என வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த செயலணிக்குழு அறிவித்துள்ளது. (ற-43)

## தினசரி தியானம்

# விவேகச் சிந்தனைகள்

நாம் கடவுளின் குழந்தை என்றால் நாமும் கடவுளைப் போன்ற வார்ப்புதான். ஆகவே அவர் பரிசுத்தமானவர் என்றால் நாமும் பரிசுத்தமானவர்கள்தான். ஆகவே நீங்கள் உண்மையிலேயே பக்திசெலுத்த விரும்பினால் நீங்களும் பகவானாகவே ஆகவேண்டியது அவசியமாகிறது.

சுவாமி விவேகானந்தர்

# பொன் அணிகளின் போரில் பற்றிக்ஸ் அணி வென்றது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கும், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும் இடையிலான 88ஆவது பொன் அணிகள் போரில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் பெருவெற்றி பெற்றது.

முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி தனது இரண்டாவது இனிங்ஸில் விக்கெற் இழப்பின்றி 10 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தினைத் தொடர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி அணி 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. 31 ஓட்டங்களுக்கு 3விககெற்றுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்த யாழ்ப்பாணக்கல்லூரி அணியை நிரூபரன் 55, மயூரன் 35, பாலு 19 ஓட்டங்களையும் பெற்று அணியை ஸ்திரமான நிலைக்கு இட்டுச்சென்றனர். எனினும் ஏனையோர் பிரகாசிக்காததன் காரணமாக மதிய இடைவேளைக்குப் பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரி அணி சகலவிக்கெற்றுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பாக சிறப்பாகப் பந்துவீசிய பத்மமுரளி 72 ஓட்டங்களைக்கொடுத்து 5விக்கெற்றுக்களையும் சுரேன் 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக பத்திரிசியார்கல்லூரி அணியின் விதுபாலாவும் சகலதுறை ஆட்டக்காரராக பத்திரிசியார் கல்லூரிஅணியின் வின்சனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக்கல்லூரி அணியின நீரூபரனும் சிறந்த பந்துவீச்சாளராக பத்திரிசியார் கல்லூரி அணியின் பத்மமுரளியும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரிஅணியின் மயூரனும் தெரிவு செய்யப்பட்டன.அத்துடன் சிறப்பு விருதுகள் பத்திரிசியார் கல்லூரிஅணித்தலைவர் சுரேனுக்கும் யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பில் சிவப்பிரகாசுக்கும் வழங்கப்பட்டன. (த-39,4)

# கையடக்க தொலை பேசிகளின் உள்வரும் அழைப்புக்கள் இலவசம்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புக்கு கட்டணம் அறவிடுவதில்லை என்ற யோசனை அமுலாகும பட்சத்தில் நாட்டின் தொலைபேசிப் பாவனை மேலும் அதிகரிக்குமென டயலொக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உள்வரும் அழைப்புக்களுக்கான கட்டணங்களை நீக்குவது தொடர்பாக வாடிக்கையாளர்களிடம் அபிப்பிராயத்தைக் கோரியுள்ள தொலைத் தொடர்பு ஒழுக்காற்று ஆணைக்குழு உத்தேச திட்டத்தின் கீழ் நெருக்கடி நேரத்தில் ஒருவர் அழைப்பை மேற்கொண்டால் அவர் மேலதிகமாக 5 ரூபாவை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் இவ்விதம் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்பவர்கள் மேலதிக பணத்தை செலுத்தும் நடைமுறை இருந்து வருவதாகவும் டயலொக் நிறுவனம் மேலும் தெரிவித்திருக்கிறது. (க-7)

# வருடாந்த மஹோற்சவம்

(நல்லூர்)

கச்சேரி நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

தினசரி உற்சவங்களாக காலை 7.30 மணிக்கும் மாலை 5மணிக்கும் வசந்தமண்டப பூசையும் நடைபெறவுள்ளது.(த-4)

# அரசு-புலிகள்...

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல்குழுவினர் கடந்த 10ந் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவை சென்றடைந்தனர். அங்கு அவர்கள் பல்வேறு தரப்பினர்களுடன் சந்திப்புகளை நடாத்தி வருகின்றனர். இதன்படி நேற்றுக் காலை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்முடன் இக்குழுவினர் பேச்சுக்களை நடத்தினர்.

அதன்போது அரசாங்கமும் புலிகளும் இணைந்து செயற்படும் அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான விடயங்கள் நீண்ட நேரமாக ஆராயப்பட்டன.இதில் பலமுக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன. இவ்விவகாரத்தை சம்பந்தப்பட்ட இருதரப்பினருமே பேசிதீர்மானிக்கவேண்டும்.

அதன்படி எடுக்கப்படும் முடிபுகளை அறிவிப்பதற்கு முன்னர் நோர்வே இறுதி வடிவம் கொடுக்கும் என்றார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சனுடனான சந்திப்பின்போது தமிழ்செல்வன் கூறுகையில்,

மேலும் கிழக்கில் ஆயுதக்குழுக்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அதிருப்தியையும் கவலையையும் அளிக்கின்றன. சுனாமி நிவாரணப்பணிகளில் ஈடு பட்டு வரும் புலிகளின் அரசியல்துறைப் போராளிகளை குறிவைத்தே இத்தாக்குதல நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைகள் அரசாங்கத்துடன் இணைந்து ஏற்படுத்தப்படக்கூடிய பொதுக் கட்டமைப்பு தொடர்பானவறறை தடைசெய்து விடுகின்றன என்றும் பீற்றர்சனிடம் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் புலிகளின் குழுவினர் நோர்வே வெளிவிவகார அமைச்சின் சர்வதேச அபிவிருத்திக்கான செயலர் லிவ்லுண்டேயினை சந்தித்தனர். (த)

## ஆர்ப்பாட்டக்காரர்கள்...

பொலிஸாரும் குவிக்கப்பட்டு ஆர்ப் பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர். பதிலுக்கு இராணுவத்தினர் மீதும் பொலிஸார் மீதும் கல்வீச்சு இடம்பெற்றது.

இதனையடுத்து யாழ். மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கிராம உத்தியோகத்தர் இராசரத்தினம, பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்ட அவசரகூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

✡ இதில் சாவகச்சேரி நகரில் உள்ள இராணுவக் காவலரண்களை அகற்றுதல். இராணுவ வாகன அனுமதிப்பத்திரங்களை பொலிஸார் பார்வையிடல்.

✡ இரவு நேரங்களில் இராணுவ வாகனங்கள் வெளிச்சமின்றிச் செல்வதை தடுத்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதற்கிடையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏ-9 வீதியால் நுணாவில் பக்கம் நகர்ந்து ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் கல்வீச்சிலும் ஈடுபட்டனர். பதிலுக்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். குண்டாந் தடியடிப் பிரயோகமும் செய்தனர்.

இதில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கந்தசாமி குமரகுருபரன் (வயது 25 மிருசுவில்), செல்வராசா அகிலன் (வயது 31 கச்சாய்) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

நேற்றைய களேபரத்தினால் சாவகச்சேரியில் நகரின் ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்ததுடன் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டது. (த-29-33-37-43)

## மாவீரர் நினைவுக்கற்கள் இன்று திரை நீக்கம்

(கொடிகாமம்)

தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இரண்டு மாவீரர்களின் நினைவுக்கற்கள் இன்று திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளன.

கடந்த 19.08.1999 அன்று வரணிப்பகுதியில் இலங்கை இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப்டினனட் இளங்குமரன் என அழைக்கப்படும் இடைக்குறிச்சி வரணியை சொந்த முகவரியாகக்கொண்ட ஆறுமுகம் சீலன் மற்றும் கடந்த 28.11.1995 அன்று சூரிய கதிர் நடவடிக்கையில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட வீரவேங்கை அர்ச்சுதன் என அழைக்கப்படும் கைதடி நாவற்குழியை சொந்த முகவரியாகக் கொண்ட பொன்னுத்துரை ஜெயகரன் ஆகிய இரு மாவீரர்களின் நினைவுகற்கள் இன்று பிற்பகல் 4மணிக்கு திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளன.(த-4)

ஹோட்டல் வேலையாள் தேவை
✡.சமையல்காரர்
✡.ரீ மேக்கர்
✡.சப்பிளையர்கள்
[வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்]
உடன் தொடர்பு கொள்க. T.P: 7125
திரிஸ்ரார் ஹோட்டல்
இல.162 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(C-1134)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு
அங்கீதா நடித்த
லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு
செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)



குளிரூட்டப்பட்டது
நாதன்ஸ் சினிமா
[ஆஸ்பத்திரி முன்பாக]
லியோனாட் - டிக்
அப்பிறோ - கேற்
நடிக்க
டைட்டானிக்
தினசரி 10.30, 2.30 (பு.நே)
தினசரி 06.30, 9.30 இற்கு (பு.நே)
ரஜனி, அம்பிகா நடித்த
நான் சிவப்பு மனிதன்
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்
டைடானிக் திரையிடப்படுகின்றது



நிறைஞ்சனாஸ்
சாங்கானை
விஜய், திரிஷா, சாயாசிங்
மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
கா.நே 11.00, 2.45, 6.00(பு.நே)



மனோகரா யாழ்ப்பாணம்
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
தாமு மற்றும் பலர் நடிப்பில்
மாயாவி
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)



JAFFNA CELLULAR
MOBITEL - G.S.M
விலை 11500/=
விலை 11500/=
மேசைத் தொலைபேசிகள் இணைப்புக்களுடன் விற்பனைக்குண்டு
கையடக்க தொலைபேசிகளுக்கான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ளவும்.
திருத்த வேலைகளை உடன் செய்து கொள்ளவும்.
குறிப்பு: கையடக்க தொலைபேசிகள் லொக் உடைத்து கொடுக்கப்படும்.
மேலும் விபரங்கட்கு
JAFFNA CELLULAR
151, 1/4 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
T.P/ 0777738888
0777209175
0712504340
(C/1133)







இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.